பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஆயிஷா ஜுவல்லரி

நேற்றைய கனவை இன்றே நனவாக்கிடுங்கள்.
உத்தரவாதத்துடன், நம்பிக்கையுடன் குறித்த நேரத்தில் உங்கள் ஆடர்களை மகிழ்வுடன் எங்களிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆயிஷா
ஜுவல்லரி

இல. 140, செட்டியார் தெரு,
கொழும்பு - 11. தொலைபேசி:36771

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4591 1984 ஜூன் 25 திங்கட்கிழமை ★ ★ ★ දිනපති

செய்தி இலாகாவில் பதிவு பெற்றது

தங்க நகைகளின் மாளிகை
கண்கவர் டிசைன்களில்
நாளைய பாணி
டிசைன்களில் உங்கள் தேவை
அறிந்து சுத்தமான
தங்கத்தில் ஆபரணங்களைப்
பெற்றுக் கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்
AYSHA JEWELLERY
140, SEA STREET,
COLOMBO-11. T'phone: 36771.

### வெளியார் உள்ளே செல்ல முடியாதபடி

# இன்று பாடசாலைகளில்

# பலத்த கண்காணிப்பு

## வங்கிவாகனம்மீது கைக்குண்டு வீச்சு

### வழிப்போக்கர் ஒருவர் பலி

கொழும்பு, ஜூன் 25

மக்கள் வங்கியின் பாதுகாப்பு வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதனால் பாதையில் நின்ற ஒருவர் மரணமானார்.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில், கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது. இதனை ராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

ராஜாங்க அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

கஸ்தூரியார் வீதி வழியாக மக்கள் வங்கி பாதுகாப்பு வாகனம் சென்று கொண்டிருந்த

(2ஆம் பக்கம் பார்க்க)


## சமுகமளிக்கத் தவறும் ஆசிரியர்கள் பதவியை இழந்தவர்கள் ஆவர்

### குழப்பம் விளைவிக்க முனைவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு

— மனோகரி பிள்ளை —

கொழும்பு, ஜூன் 25

கொழும்பில் பாடசாலைகள் இன்று திறக்கப்படுகின்றன, வெளியார் எவரும் உள்ளே செல்ல முடியாதவாறு பலத்த கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாணவர்களைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு பெற்றோர் கேட்கப்பட்டு இருக்கிறார்கள், பெற்றோர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படு



"கம் உதாவ — 84" கண்காட்சியை திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாடசாலை மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் காட்சி. (வலமிருந்து) அநுராதபுர மாவட்ட அமைச்சர் திரு. சந்திரா பண்டார, அவரது பாரியார், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, திருமதி ஹேமா பிரேமதாசா, இ. நா. பிரதிநிதி திரு. ராமச்சந்திர, சர்வோதய இயக்கத்தின் தலைவர் திரு. ஏ. டீ. ஆரியரத்ன, திருமதி ஆரியரத்ன ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

[படம்: சிறில் பஸ்நாயக்க] (ண-11)

## உலமா கருத்தரங்கு

கொழும்பு, ஜூன் 25

பள்ளிவாசல்களில் கடமை செய்யும் இமாம்கள், கதீப்மார்கள் ஆகியோர் உட்பட உலமாப் பெருமக்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும்

(2ஆம் பக்கம் பார்க்க)

## தெல்தெனியா நகரம் நீரில் மூழ்கும்

கொழும்பு, ஜூன் 25

தெல்தெனியா நகரத்தின் கீழ்ப் பகுதி முழுவதும் அடுத்த இரண்டு வாரத்திற்குள் விக்டோரியா நீர்த்தேக்க நீரினுல் மூழ்கடிக்கப்பட்டுவிடும்.

இப்படி மகாவலி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 200 அடிவரை உயர்ந்திருக்

(2ஆம் பக்கம் பார்க்க)

துச் செல்லுமாறு பெற்ருேர் கேட்கப்பட்டு இருக்கிருர்கள், பெற்ருேர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

இன்று பாடசாலைக்குச் சமுகமளிக்கத் தவறும் ஆசிரியர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள். இப்படி கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது-

பாடசாலைகளில் யாராவது குழப்பம் விளைவிக்க முனைந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டு இருக்கிருர்கள். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் இது பொருந்தும்-

பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகச் சம்பவங்களை அடுத்து, பாடசாலை மாணவர்களைத் தூண்டிவிட்டு குழப்பங்களை ஏற்படுத்தச் சில தீய சக்திகள் முனைந்து வருவதாக அரசுக்கு இரகசியத் தகவல் கிடைத்திருக்கிறது.

அதன் காரணமாகவே பாடசாலைகளும் மாணவர்களும் சம்பந்தப்பட்டமட்டில் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பேராதனை, கொழும்பு பல்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கத் தலைவர் உட்பட 12 பேர் கைது

கொழும்பு, ஜூன் 25

பாடசாலை மாணவர்களைக் கலவரத்தில் ஈடுபடத் தூண்டும் விதத்தில் திட்டங்களை தீட்டியதாகச் சந்தேகிக்கப்படும் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் உட்பட, 12 பேர் கண்டி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்த விரிவுரையாளர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட இடதுசாரி கட்சி ஒன்றில் மூன்ருவது ஸ்தானத்தை வகிக்கும் தலைவர் எனக் கூறப்படுகிறது.

கண்டி பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களிடம் இருந்து, 2,000 துண்டுப் பிரசுரங்கள், 25 சுவரொட்டிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இடதுசாரி அரசியல் கட்சிகள், தமது கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற் சங்கங்களுடன் இணைந்து வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும் திட்டம் தீட்டி இருக்கின்றன எனவும் தெரிய வந்துள்ளது.

குழப்பங்களை தூண்டி விட முயலும் பல தீவிரவாதக் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், அரசாங்கத்திற்கு புதிதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

(உ-மு)

## வராத மாணவர்கள் பற்றி கணக்கெடுப்பு

கொழும்பு, ஜூன் 25

கடந்த வாரத்தில் பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்குமாறு பாடசாலை அதிபர்கள், கல்வி அமைச்சினுல் கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று, கொழும்பில் இருக்கும் பிரதான பாடசாலைகளுக்கு அதிகாரிகளை அனுப்பி நிலைமையை ஆராய கொழும்பு தெற்கு கல்விப் பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(உ-மு)

## பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்

கொழும்பு, ஜூன் 25

மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களை விரைவில் திறக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

பல்கலைக்கழகங்களை இன்ருே, நாளையோ திறக்க தீர்மானிக்கப்படவில்லை என, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் அமைதி அடைந்த பின்னரே பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது, அதனையடுத்து இடம் பெற்ற தீவைப்புச் சம்பவங்கள் தொடர்பாக, தனித்தனி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கலவரங்களை ஏற்படுத்த முயன்ற 40 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-மு)

பேராதனை சம்பவம்

## மீண்டும் நாளை மரணவிசாரணை

கண்டி, ஜூன் 24

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவப் பீட பட்டதாரி மாணவரின் மரணம் தொடர்பான மரண விசாரணை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு மீண்டும் நடைபெறும்.

கடந்த 19 ஆம் திகதி இரவு நிகழ்ந்த பல்கலைக்கழக மாணவர் - பொலீஸ் மோதலின்போது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனுல் தங்காலையைச் சேர்ந்த எச். பீ. ஏ. பத்மசிரி என்ற மாணவர் மரணமானுர் என்பது தெரிந்ததே.

கண்டி மாஜிஸ்திரேட் திரு. வி. நாணயக்கார, சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று நேரடி விசாரணைகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் திரு. சந்திரா பண்டார, அவரது பாரியார், பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, திருமதி ஹேமா பிரேமதாசா, டீ. நா. பிரதிநிதி திரு. ராமச்சந்திர, சர்வோதய இயக்கத்தின் தலைவர் திரு. ஏ. ரீ. ஆரியரத்ன, திருமதி ஆரியரத்ன ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

[படம்: சிறில் பஸ்நாயக்க] (ண-11)

தறபோது ... நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 200 அடிவரை உயர்ந்திருக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் "பிரம்படி" பெற்ருர்!

லண்டன், ஜூன் 24

பிரிட்டிஷ் அரசி எலிஸபெத்தின் இரண்டாவது மகன் இளவரசர் அன்ட்றூ இளம் பெண் ஒருத்தியிடம் பிரம்படி வாங்கினுர்.

இளவரசர் அன்ட்றூவை குனியவைத்து, சிப்பந்தியான அந்தப் பெண் பிரம்பால் அடித்தார்.

வேடிக்கையாகத் தான் இந்தச் சம்பவம் நடந்தது. அதனுலேயே இளவரசர்

(2ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டைச் சீரழிக்கும் முயற்சியில் தீய சக்திகள்

## உள்ளும்புறமும் இருந்து முயற்சி என்று பிரதமர் முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தீயசக்திகள் பலதரப்பட்ட தந்திரோபாயங்களை கையாண்டு இலங்கையைத் துண்டாடிச் சீரழிக்க முயல்கின்றன. இந்தத் தீய சக்திகளில் இருந்து நமது நாட்டைப் பாதுகாப்பது அவசியமாகும்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச கடந்த சனிக்கிழமை அனுராதபுரத்தில் கிராமோதய 84 கண்காட்சியை திறந்து வைத்தார்.

அவர் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறியதாவது:—

மதங்களையும், அப்பாவி மாணவர்களையும், தொழிலாளர்களையும் ஏவி விட்டு குழப்பங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலை மாணவர்களை சந்தித்து லலித் பேச்சு

## பலாலியில் நடந்தது

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுடன், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுக் காலை பேச்சு வார்த்தை நடத்தினுர்.

வடக்கிற்கு அமைச்சர் திடீர் விஜயம் மேற்கொண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வைத்து பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேச நேசையா, மாணவ ஆலோசகர் பேராசிரியர் எஸ். மகேஸ்வரன், பல்கலைக்கழக பதிவாளர் திரு. எஸ். சிவராசா ஆகியோரும் பேச்சு வார்த்தையின் போது உடனிருந்தனர் என்று தெரிகிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து கடந்த சில தினங்களாக வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்தனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

அவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் பற்றி, பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை தகவல் இல்லை.

(உ-கு-120)

### நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.22 |
| ஸுபஹு | — காலை | 4.37 |
| சூரிய உதயம் | — காலை | 5.57 |
| லுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பிற்பகல் | 3.41 |
| மஃரிபு | — மாலை | 6.29 |
| இஷா | — இரவு | 7.49 |

### சோமண்ணை



வன்செயல்களுக்கு மாணவர்களை இழுக்கிறவை இருக்கினமெல்லே, அவை தங்கட வயதிலை பள்ளிக்கூடம் போனதில்லை எண்டும், இப்ப பள்ளிக்கூடம் போற வயதிலை அவையளுக்குப் பிள்ளைகள் இல்லை எண்டும்தான் நினைக்க வேண்டியிருக்குப் பாருங்கோ.

கொழும்பு பல்கலைக்கழக

# மாணவர் மரணம்

## நியாயப்படுத்தக் கூடிய 'கொலை' எனத் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு பல்கலைக்கழக மாணவனின் மரணம் மன்னிக்கக் கூடிய — நியாயப்படுத்தக் கூடிய கொலை என கொழும்பு பிரதம நீதிவான் நேற்று மரண விசாரணையில் தீர்ப்பளித்தார்.


கொழும்பு ஹவ்லொக் வீதியில் கடந்த வியாழக்கிழமை குழப்பம் விளைவித்த மாணவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒருவர் மரணமானுர்.


கொழும்பு பிரதம நீதிவான் திரு. கொலின் சமரசேகர மரண விசாரணை நடத்தினுர்.

மக்களது உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து விளைவிக்கும்

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி







தலைமன்னார் கிராமோதய சபையும், பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பனம் பொருள் அபிவிருத்தி விழா தலைமன்னார் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

அங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராஜா உரையாற்றுகின்றார். மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் தலைமன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. வி. ஆர். ராமசாமிஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காண்க.

தலைமன்னார் கிராமோதய சபை பயிலுல் அமைக்கப்படவிருக்கும் பனம் 'தும்புத்' தொழிற்சாலைக் கான அடிக்கல்லை மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பாஸ்கரதாஸ் நடுவதை இரண்டாவது படத்திலும்,

மேற்படி விழாவின் போது நடைபெற்ற பனம் பொருள் கண்காட்சியில் தலைமன்னார் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்களை கொள் முதல் செய்து விற்பனையை ஆரம்பித்து வைப்பதை மூன்றுவது படத்திலும் காண்க. (எ—251)

[படங்கள்:— தினபதி பேசாலை நிருபர் சி. தர்மகுலசிங்கம்]

இலங்கையில் தான்

# கல்வித் திட்டத்தை முறியடிக்க முயற்சி

## பேராதனை பல்கலைக்கழக மாணவனின் மரணவிசாரணையில் உபவேந்தர்

கண்டி, ஜூன் 24

"உலகில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களுக்குத் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய சுதந்திரமும், உரிமையும் இருக்கின்றன. ஆயினும் அங்கு கல்வி அபிவிருத்தியை முறியடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. ஆனல் நமது நாட்டிலோ சில ஆசிரியர்கள் பகிரங்கமாக இல்லாமல், இரகசிய முறையில் இவ்வாறு கல்வித் திட்டங்களை முறியடிக்க மாணவர்களைத் தூண்டி விடுகிறார்கள்."

இவ்வாறு கூறினர் பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் திரு. பீ. எல். பண்டிதரத்ன.

கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. நாணயக்கார முன்னிலையில் அவர் இவ்வாறு கூறினர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த எச். பீ. அபயசேகர பத்மசிறி என்ற பட்டதாரி மாணவனின் மரணம் தொடர்பான மாஜிஸ்திரேட் விசாரணையின் போதே உபவேந்தர் மேற்கண்டவாறு கூறினர்.

கண்டி உதவி பொலீஸ் சுப்பிரிண்டன் திரு. எஸ். எம். எச். பீ. செனவிரத்னவின் நெறியாள்கையுடன் சாட்சியம் அளித்த பேராசிரியர் பண்டிதரத்ன மேலும் கூறியதாவது,

"1956 ஆம் ஆண்டு தொடக்கம் நான் பூகோளவியல் பேராசிரியராகவும், வளாகத் தலைவராகவும், பின்னர் 1979 ஜனவரி 1 ஆம் திகதி முதல் உபவேந்தராகவும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

இங்கு 5000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்கள், பேராசிரியர்கள் 600 பேரும், நிர்வாகத் துறையில் 2,000 பேரும், சிற்றூழியர்கள் 1,200 பேரும் இங்கு பணிபுரிகிறார்கள். ஆசிரியர்களுக்காக 400 உத்தியோகபூர்வ வீடுகளும், ஏனையோருக்கு 300 வீடுகளும் இங்கு உண்டு. இவர்களின் குடும்பங்களில் உள்ளவர்களும் இங்குதான் வசிக்கின்றனர்.

எல்லாமாக பல்கலைக்கழக வளவுக்குள் சுமார் 15,000 பேர் வசிக்கின்றனர். 1960 ஆம் ஆண்டு தொடக்கம் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து வசிக்கின்றேன். பல வீடுகளும், மாணவர் விடுதிகளும் கலகா பாதையின் இருமருங்கிலும் இருக்கின்றன. மகாவலி கங்கையின் மறுபுறம் அதிபர் விடுதியும், பொறியியல் பீடமும் இருக்கின்றன.

பல்கலைக்கழகத்துக்குள் பல தரப்பட்ட குழப்பங்கள் இருந்து வந்திருப்பதை நான் மறந்து விடவில்லை. பேராசிரியர் டயஸ் என்பவரைக் கடத்திய சம்பவம் எனது காலப் பகுதியில் நடைபெற்ற போதிலும் இந்தச் சம்பவம் தொடர்பாக 10 மாணவர் விரிவுரைகளுக்காகத் தடை செய்யப்பட்டனர். இதன் பின்னர் சில மாணவர்கள் எம்மீது ஆத்திரம் கொண்டிருக்க முடியும்.

உதவி பொலீஸ் சுப்பிரிண்டன் திரு. செனவிரத்ன:— உங்களது ஆசிரியர் குழுவில் உள்ள சிலர் குழப்பத்தை விளைவிக்கத் தவருன வேலைகள் செய்கிறார்களா?

உபவேந்தர்:— ஐயா! முழு உலகிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்க சுதந்திரம் உண்டு.

இருப்பினும் இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி சில ஆசிரியர்கள் இங்கு மாணவர்கள் மத்தியில் குழப்பங்களை விளைவித்து, அவர்களது கல்வியையும் பாதிக்கச் செய்கின்றனர்.

வேறு நாடுகளில் இப்படி நடப்பது இல்லை.

பேராசிரியர் டயஸை கடத்திய சம்பவத்தின் பின்னர் ஆசிரியர்கள் அங்கு வசிக்கவும், தொழில் புரியவும் அஞ்சி என்னிடம் பாதுகாப்புக் கேட்டனர். சிலர் எழுத்து மூலம் கேட்டிருந்தனர்.

இந்த அச்சம் இருக்கும் பொழுது பொலீஸ் பாதுகாப்பு தவிர வேறு பாதுகாப்பு முறைகளும் ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.

இருப்பினும் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவின் மூலம் எத்தகைய பாதுகாப்பும் அளிக்க முடியாதென எமக்குத் தெரிய வந்தது.

ஒவ்வொரு மாதமும் பல்கலைக்கழக நிருவாகக் குழுவினர் கூட்டத்தின் போது பாதுகாப்புப் பிரிவு பற்றியே அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவது வழக்கம். உயர் கல்வி அமைச்சுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டதும் அரசாங்கத்தின் மூலம் பாதுகாப்புக் கேட்ட அதே வேளையில் ஜனாதிபதி இங்கு பாதுகாப்புப் பிரிவை ஏற்படுத்த ஆலோசனை வழங்கினர்.

1983 ஆம் ஆண்டு, டிசம்பர் 27 ஆம் திகதி பல்கலைக்கழகப் பாதுகாப்புக்காக "சரஸவிய பொலீஸ்" நிலையம் நிறுவப்பட்டது. இந்தப் பொலீஸ் நிலையத்துக்கு கிந்தகல, களுகமுவ போன்ற கிராமங்களும் நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பொலீஸ் நிலையம் பல்கலைக்கழகக் கட்டடத்திலே தான் நிறுவப்பட்டது. அதன் திறப்பு விழாவுக்கு நானும் சென்றேன். தொலைபேசி நிலையம், சலவை நிலையம் ஆகியனவும் அதற்கு அருகிலேயே நிறுவப்பட்டுள்ளன. பொலீஸ் நிலையப் பொறுப்பாளராக திரு. கருணுதாஸ கடமை புரிகின்றார்.

பல சந்தர்ப்பங்களில் கடமையின் போது அவரைச் சந்தித்திருக்கின்றேன். அவரைப் பற்றியோ அல்லது ஏனைய ஊழியர்களைப் பற்றியோ முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

கடந்த 19 ஆம் திகதி இரவு 10 மணிக்கு திரு. கருணுதாஸ தொலைபேசியில் பேசினர். அவர் என்னிடம், மாணவர்கள் சிலர் மதுபோதையில் தவருன முறையில் நடந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து ஒருவரை அவர் கைது செய்ததாகவும் கூறினர்.

மாணவர்கள் பெருந் தொகையினர் வந்து கைது செய்யப்பட்டவரை வெளியே தரும்படி கேட்டதாகவும், அதன் பிரகாரம் அவரை வெளியே அனுப்பியதாகவும் திரு. கருணுதாஸ மேலும் என்னிடம் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குள் 1965 ஆம் ஆண்டிலும், அதன் பின்னரும் 1976 ஆம் டிலும் குழப்பங்கள் நிகழ்ந்தன.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் முதலாவதாக ஒரு பட்டதாரி மாணவர் இறந்ததும் 1976 ஆம் ஆண்டில்தான். இவ்வாறு இறந்தவர் வீரசூரியா என்ற மாணவர் ஆவார்."

இப்படி திரு. பண்டிதரத்ன மேலும் கூறினர்.

மாணவர்களின் உரிமைக்காக நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளான திருவாளர்கள் லால் விஜயநாயக்க, ஜயம்பத்தி விக்ரமரத்ன ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

பல்கலைக்கழக பொலீஸ் நிலையப் பொறுப்பாளரான சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. கே. டி. கருணுதாஸ சட்டத்தரணிகளினதும், ஏ. எஸ். பி. திரு. செனவிரத்னவினதும் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

(எ— 105)

## மாணவர் மர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறையை தவிர்க்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இந்த மாணவர் மரணமானுர். பொலீஸாரின் நடவடிக்கை சட்டப்படியானதே, என்று நீதிவான் நேற்று தீர்ப்பில் தெரிவித்தார்.

நீதிவான் மேலும் தனது தீர்ப்

பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் மாணவர்கள் அங்கிருந்து ஓடினர்.

இரண்டு மாணவர்கள் சூடு பட்டு விழுந்தனர். அந்த மாணவர்களை அங்கு விட்டு, விட்டு ஏனைய மாணவர்கள் கலைந்து ஓடினர்.

## உலமா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறும்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவின் பணிப்புரையின் பேரில் முஸ்லிம் சமய, கலாசார விவகார இயக்குநர் இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

ஜூலை 31 ஆம் திகதி முதல்

கண்டி பல்கலைக்கழக மாணவர் மரணம்

## கதவுகளை உடைத்துக்கொண்டு உள்

# கதவுகளை உடைத்துக்கொண்டு உள

## புக எத்தனித்ததால் சுடும்படி உத்தரவிட்டேன்

### பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சாட்சியம்

கண்டி, ஜூன் 24

சம்பவ தினம் பல்கலைக் கழக வளவில் உள்ள மேட்டுப் பகுதிகளில் இருந்து மாணவர்கள் பொலீஸ் நிலையத்தை நோக்கிப் பெருமளவு கற்களையும், பொல்லுகளையும் எறிந்து தாக்க ஆரம்பித்தனர். தாக்குதலின் பின் பொலீஸ் நிலையக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புக எத்தனித்த போதே அவர்களை நோக்கிச் சுடும்படி நான் உத்தரவிட்டேன்.

இவ்வாறு கூறினார் பேராதனை பல்கலைக்கழக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. கே. டி. கருணாதாஸ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடந்த 19 ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூடு காரணமாக இறந்ததாகக் கூறப்படும் பல்வைத்திய பட்டதாரி மாணவரான அபயசேகர பத்மசிறி என்பவரின் மரணம் தொடர்பாக கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

அங்கு சாட்சியம் அளித்த பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி மாஜிஸ்திரேட் திரு. சி. நாணயக்கார முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

இவ் விசாரணையின் போது சாட்சியங்களை கண்டி உதவி பொலீஸ் சுப்பிரின்டன் திரு. எஸ். எம். எச். பீ. செனவிரத்ன நெறிப்படுத்தினார்.

அங்கு தொடர்ந்தும் சாட்சியம் அளித்த திரு. கருணாதாஸ் மேலும் கூறியதாவது:—

இந்தச் சம்பவம் நடைபெற்ற 19 ஆம் திகதி மாலையில் சுகவீனம் காரணமாக நான் கசாயம் குடித்துக்கொண்டு பொலீஸ் நிலையத்தில் சாரம் அணிந்து தங்கியிருந்தேன்.

அவ்வேளையில் பொலீஸ் நிலைய சமையல் அறைப் பக்கமாக பலத்த சத்தம் போடுவது கேட்டது. அங்கு போய்ப் பார்த்த பொழுது ஏழு அல்லது எட்டுப்பேர் கூடியிருந்தனர்.

எங்களின் நண்பர் ஒருவர் உள்ளே புகுந்ததால் அவரை நாம் வெளியே எடுக்க வந்தோம் என்றனர். இந் நிலையில் உள்ளேயிருந்த நபரை நோக்கி நான் வினவிய பொழுது, "வழி தெரியாமல் உள்ளே வந்து விட்டோம்" என்றனர். உடனே அப்படியானல் போய் விடுங்கள் என்று கூறியதும், வெளியே சென்ற அவர்கள், பொலீஸ் நிலையத்துக்கு அப்பால் சென்று, இருங்கள்! உங்களுக்கு வேலை தருகின்றோம் எனக் கூறிச் சென்றனர்.

இவ்வாறு சென்றவர்கள் மீண்டும் சுமார் 50 பேருடன் பொலீஸ் நிலையம் நோக்கி வந்தனர். அப்பொழுது நேரம் இரவு 9 மணியிருக்கும். இவ்வாறு வந்தவர்கள் சத்தம் போட்டுக் கொண்டும், தூஷண வார்த்தைகளைக் கொண்டு ஏசியும், பெரும் கலாட்டா விளைவித்தனர்.

மீண்டும் அவர்களை நோக்கி அமைதியாக இங்கிருந்து போய் விடுங்கள் எனக் கூறினேன். கொஞ்ச நேரத்தில் சுமார் 3000 பேர் அளவில் அங்கு ஒன்று திரண்டு விட்டனர்.

அவ்வேளையில் பொலீஸ் நிலையத்தில் என்னோடு ஏழுபேர் மாத்திரமே இருந்தனர். இவர்களில் நானும், குணத்திலக்க என்ற கான்ஸ்டபிளும் மாத்திரமே அனுபவம் வாய்ந்தவர்கள். ஏனையோர் சேவைக்குப் புதியவர்கள்.

இந் நிலையில் பல்கலைக்கழக வளவில் உள்ள மேட்டுப் பகுதிகளில் இருந்து பொலீஸ் நிலையத்தை நோக்கி சரமாரியாகக் கற்களையும், பொல்லுகளையும் வீசித் தாக்கினர்.

கதிரைகள், வாங்குகள் போன்றவற்றைக் கொண்டு வீசி எறிந்தனர். கற்களைத் தொடர்ந்து வீசியதால் நாம் பீதியும், அச்சமும் கொண்டோம்.

இந்நிலையில் கதவுகளை உடைத்துக் கொண்டு பொலீஸ் நிலையத்தின் உள்ளே புக எத்தனித்த வேளையில் அவர்களை நோக்கிச் சுடும்படி நான் சிரேஷ்ட கான்ஸ்டபிளான குணத்திலக்காவுக்கு உத்தரவிட்டேன்.

முதலில் ஆகாயத்தை நோக்கிச் சுட்ட அவர், பின்னர் கூட்டத்தை நோக்கிச் சுட்டார். பின்னர் நானும், எனது ரிவோல்வரைக் கொண்டு பத்துத் தடவைகள் ஆகாயத்திலும், கூட்டத்தை நோக்கியும் சுட்டேன்.

குணத்திலக்காவின் கையில் இயந்திரத் துப்பாக்கி இருந்தது.

#### சமாதானத்தை விரும்புபவன்

நான் எப்பொழுதும் சமாதானத்தையும், அமைதியையும் விரும்பி மதிப்பு அளிப்பவன். எனவேதான் என்னை இந்த நிலையத்துக்குப் பொறுப்பாக உயர் அதிகாரிகள் நியமித்தார்கள். எனக்கும் பிள்ளைகள் இருக்கத்தான் செய்கின்றனர். நான் எப்பொழுதும் மாணவர்களை அன்பாக நேசிப்பவன். சமாதான முறையில் பழகவே நான் விரும்புவது வழக்கம்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கண்டி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் இறந்து விட்டதாக அறிந்தேன். மற்றும் ஒருவர் காயப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிந்தேன்.

ஜூன் 20 ஆம் திகதி பல்கலைக் கழகம் 12 மணியுடன் மூடப்பட்ட பொழுதிலும் மாணவர்களில் பலர் அங்கு கூடியிருக்கக் காணப்பட்டனர்.

பொலீஸ் நிலையக் கூரை, ஜன்னல் கதவு அனைத்தும் நொறுக்கப்பட்டிருந்தன. கற்குவியலைத்தான் பொலீஸ் நிலையத்தில் காண முடிந்தது.

இரும்பு, பொல்லு, கதிரை, மேசைகள் யாவும் தூக்கி எறியப்பட்டிருந்தன.

நான் கூட்டத்தை நோக்கிச் சுட உத்தரவிட்ட பொழுது ஒவ்வொரு ரவையாகச் சுடும்படியே உத்தரவிட்டேன். இவ்வாறு அவர் கூறினார்.

#### இரண்டாம் நாள் சாட்சியம்

கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பிரதம நீதிவான் திரு. வி. நாணயக்கார முன்னிலையில் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து, திரு. கருணாதாஸ சாட்சியம் அளித்தார்.

அங்கு உதவி பொலீஸ் சுப்ரின்டன் திரு. எஸ். எம்- எச்- பீ. செனவிரத்னவின் அனுசரணையுடன் திரு. கருணாதாஸ மேலும் கூறியதாவது,

"பல்கலைக்கழக பொலீஸ் நிலையம் கலகா பாதையின் மேற்புறமாக உள்ள மேட்டு நிலத்தில் தான் நிறுவப் பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பொலீஸ் கான்ஸ்டபிள் திரு. குணத்திலக்க இயந்திர (சப் மெஷின்) துப்பாக்கி மூலம் பெண் பொலீஸார் இருக்கும் அறையில் இருந்து கொண்டே துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இது பொலீஸ் நிலையத்தின் வலது பக்கமாக இருக்கின்றது.

#### தரையில் இரத்தக் கறை

மாஜிஸ்திரேட் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற வேளையில் அங்கு நிலத்தில் இரத்தக்கறை படிந்த இடங்களை அவருக்குச் சுட்டிக் காட்டினேன்.

பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் இந்த இரத்தக்கறை காணப்பட்டது. நான் றிவோல்வரை உபயோகித்த இடத்தில் இருந்து அது 30 அடி தூரத்தில் இருக்கும். இயந்திரத் துப்பாக்கி உபயோகித்த இடமும் அதே தூரம் இருக்கும்"

"மார்கஸ் பெர்ணண்டோ விடுதிக்குச் செல்ல பொலீஸ் நிலைய பின்புறமாக ஒரு பாதையும் இருக்கின்றது. அது ஒற்றையடிப் பாதையாகும். ஆனாலும் மாணவர்கள் அவ்வழியாகச் செல்வதில்லை. பொலீஸ் நிலையத்துக்குள் நுழைந்த நபரை நான் பொலீஸ் நிலைய முன்வாசலி

(6ஆம் பக்கம் பார்க்க)

---

நடவடிக்கை சட்டப்படியானதே, என்று நீதிவான் நேற்று தீர்ப்பில் தெரிவித்தார்.

நீதிவான் மேலும் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:—

வியாழக்கிழமை காலை 8 மணியளவில் சுமார் 500 மாணவர்கள் ஹவ்லொக் வீதியில் கூடினர். வாகனங்கள் மீது கற்களையும், பொல்லுகளையும் வீசினர். அங்கு வந்த பொலீஸாரை தாக்கினர்.

பொலீஸார் மாணவர்களை எச்சரித்தனர். எனினும் மாணவர்கள் கலைந்து செல்லவில்லை.

எனவே அங்கிருந்த உதவிப் பொலீஸ் அதிபர் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ய, பொலீஸாரைப் பணித்தார்.

அப்போது மேலும் ஒரு மாணவர் கோஷ்டி அங்கு வந்து சேர்ந்தது. பொலீஸார் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஜீப் ஒன்று சேதமாக்கப்பட்டது. போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றையும் தாக்கினர்.

அந்த பஸ்ஸின் டீசல் தாங்கியை திறந்து தீ வைக்க ஆரம்பித்தனர்.

எனவே றப்பர் சன்னங்களை தீர்க்கும் துப்பாக்கியால் சுட உதவிப் பொலீஸ் அதிபர் உத்தரவிட்டார்.

தீ வைப்புக்கு உள்ளான பஸ்ஸில் இருந்து பிரயாணிகளை மீட்க பொலீஸார் முயற்சித்தனர். அப்போது மாணவர்கள் பொலீஸாரை தாக்கினர்.

எனவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உதவிப் பொலீஸ் அதிபர் பணித்தார்.

பட்டு விழுந்தனர். அந்த மாணவர்களை அங்கு விட்டு, விட்டு ஏனைய மாணவர்கள் கலைந்து ஓடினர்.

சூடுபட்ட மாணவர்களில் ஒருவர் மரணமானார். மற்றவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு தேறி வருகிறார். அவரின் உயிருக்கு ஆபத்தில்லை.

இப்படி நீதிவான் தீர்ப்பில் தெரிவித்தார்.

இதேவேளையில், பேராதனை பல்கலைக்கழக மாணவன் மரணம் தொடர்பாகவும் மரண விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பொலீஸ் நிலையத்தை சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் தாக்கத் தொடங்கினர். அப்போது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். என்று அந்த மரண விசாரணையில் சாட்சிகள் தெரிவித்துள்ளனர்.

(ப-மு)

---

## வங்கி வாகன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது, அதன் மீது பல கைக் குண்டுகள் வீசப்பட்டன.

வாகனம் சேதமுற்றது. அதன் பின்பக்கத்தில் இருந்த பாது காவலர் ஒருவர் காயமுற்றார்.

இச்சம்பவத்தின் போது பாதையில் நின்ற ஒரு அப்பாவி நபர் உயிர் இழந்தார்.

22 வயதான சின்னையா யோகராஜா என்பவர் காயமுற்று, பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இறந்தவர் ஒரு மெக்கானிக். ஆறு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் அவரும் ஒருவர்.

இவ்வாறு ராஜாங்க அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ண-க-129)

---

## இளவரசர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி).

அன்ட்றூவும் பிரம்படி வாங்கச் சம்மதித்தார். எனினும் இது; எலிஸபெத் மகாராணிக்குப் பிடிக்கவில்லை என்றும், அதனால் மகாராணிக்கும் மகன் இளவரசர் அன்ட்றூவுக்கும் இடையே தகராறு ஏற்படலாம் என்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

லண்டனில் "ஸ்கூல் டின்னர்ஸ்" என்று அழைக்கப்படும் விடுதி ஒன்றில் இளவரசர் அன்ட்றூ இராப் போசனம் அருந்தினார்.

விடுதியின் சிப்பந்திப் பெண்கள் பாடசாலை மாணவியரைப்போல சீருடையும் உள்ளணியும் அணிந்திருந்தார்கள்.

பிரிட்டனின் தனியார் பாடசாலைகளைப் போன்ற சூழலில் அந்தப் பொழுது போக்கு வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விடுதியின் பிரமாணங்களை இளவரசர் அன்ட்றூ மீறி விட்டார். எனவே அவரைக் குனிய வைத்து, அறுதடவை "பிரம்படி" கொடுக்க வேண்டும் என்ற வேடிக்கையான "உத்தரவு" பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு உடனே நிறைவேற்றப்பட்டும் விட்டது.

இந்த வேடிக்கைச் சம்பவமே எலிஸபெத் மகாராணிக்கும், இளவரசர் அன்ட்றூவுக்கும் இடையில் தகராறை ஏற்படுத்தலாம் என்று "சண்டே மிரர்" "நியூஸ் ஒப் த வேர்ல்ட்" ஆகிய பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

கடற்படை அதிகாரியான இளவரசர் அன்ட்றூ (வயது 24) ஒரு சொகுசு பேர்வழி. இன்னும் விவாகம் செய்து கொள்ளவில்லை.

1982 ஆம் ஆண்டிலும் கவர்ச்சி நடிகை கூஸ்டார்க்குக்கும் இளவரசருக்கும் இடையிலான காதல் விவகாரம் ஒன்று சர்ச்சையைக் கிளப்பி யிருந்தது என்பது ஞாபகம் இருக்கலாம்.

(ண).

---

முஸ்லிம் சமய, கலாசார விவகார இயக்குநர் இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

ஜூலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 3 ஆம் திகதி வரை கருத்தரங்கு நடைபெறும். ஆகஸ்ட் 4 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை புத்தூக்க வகுப்பொன்றும் நடத்தப்படும்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் இவ்வாறு பரவலான கருத்தரங்கும் புத்தூக்க வகுப்பும் நடத்தப்படுவது கூடுதல் நன்மைகளைப் பயக்கும் எனத் தாம் கருதுவதாகப் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது "தினபதி" நிருபரிடம் தெரிவித்தார்.

கருத்தரங்கில் கலந்து கொள்வோரின் விண்ணப்பப் படிவங்களை முஸ்லிம் சமய, கலாசார விவகாரத் திணைக்களம் ஏற்கனவே பெற்று வருகிறது.

(ண-7)

---

## இன்று பாடசாலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகச் சம்பவங்களை அடுத்து, கொழும்பிலும் தங்காலையிலும் உள்ள பாடசாலைகள் கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டு இருந்தன. சில பாடசாலைகள் வியாழக்கிழமையும் மூடப்பட்டு இருந்தன. இன்று எல்லாப் பாடசாலைகளும் திறக்கப்படுகின்றன.

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர் தாமும் மாணவர்களோடு பாடசாலை பஸ்களில் பிரயாணம் செய்யலாம். இதற்கு போக்குவரத்துச் சபை அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது விசேஷ அனுமதி வழங்கியுள்ளார்.

பாடசாலைகளுக்கு முன்பாகவும் மற்றும் கேந்திர இடங்களிலும் ஆயுதம் தாங்கிய பொலீஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(உ-க)

---


# தமிழ்

சுருக்கெழுத்தாளர்

# தேவை

அனுபவமுள்ள முழு அல்லது பகுதி நேர தமிழ் சுருக்கெழுத்தாளர் தேவை. விண்ணப்பிக்கவும்.

**PATHIMA BOOK DEPOT**
Amparai Road,
Akkaraipattu.

---

தினபதி


சிறு விளம்பரம்

## தேவை

நாகணம், மீன் அம்பர் தேவை. கூடுதல் விலை கொடுத்து வாங்கப்படும். கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். அம்தி ஹாஸ் இம்பெக்ஸ், 47 — 4/2, 2ஆம் குறுக்குத் தெரு, தீனியா பில்டிங், கொழும்பு—11. தொலைபேசி: 36861, 065/7252.

035005

கந்தப்பு வாத்தியார்: — செல்வா




# யாழ். விவசாயிகள் 'பி' வெங்காய

## உற்பத்தியில் ஆர்வம்

சித்தன்கேணி, ஜூன் 24

யாழ். மாவட்ட விவசாயிகள் வல்லாரை வெங்காயம், வேதாள வெங்காயம் என்பனவற்றுக்குத் தட்டுப்பாடாக இருப்பதால் "பி" வெங்காயத்தை உற்பத்தி செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

அராலியில் சுமார் 80 ஏக்கரில் இச்செய்கை நடைபெற்று வருகிறது.

இப்பகுதி வெங்காய உற்பத்தியாளர்கள் யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் நாற்றை விநியோகித்து வருகின்றனர்.

இச்செய்கையை விஸ்தரிக்க திருநெல்வேலி, அராலி விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள் ஊக்கமளித்து வருகின்றனர்.

"பி" வெங்காய உற்பத்தியாளர்கள் இவ்வாண்டு அதிக லாபத்தைப் பெறுவார்கள் என்று விவசாய விஸ்தரிப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ல—283)

# அக்கா ஜோதிலட்சுமியுடன் அடிக்கடி மோதுகிறீர்களா?

## ஜெயமாலினியிடம் கேள்வி

கவர்ச்சி நடிகையான ஜெயமாலினியிடம் ரசிகர்களுக்கு ஒரு கிக் உண்டு. அவரை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார்.

நிருபர் தெலுங்கில் கேள்வி கேட்டதும், அவர்,



ஜெயமாலினி

"எனக்கு நல்லா தமிழ் தெரியும். நானும் அசல் தமிழ் பொண்ணுதான். எல்லாம் தமிழிலேயே கேளுங்கள்" என்றார்.

"உங்கக்கா ஜோதி லட்சுமியுடன் அடிக்கடி மோதிக்கொள்

அது அடிக்கடி வரும். சமீபத்தில் கூட ஒரு தெலுங்கு படத்திற்காக சேர்ந்து ஆடினோம். ரசிகர்களை யார் கவருவது என்பதில் எங்களுக்குள் போட்டி உண்டு. மற்றப்படி ஜோதி லட்சுமி என்னோடு சமரசமாகி பல சமத்சரம்...சாரி... வருடமாச்சு" என்றார் ஜெயமாலினி.

"தமிழில் இப்ப உங்களுக்கு முன்பு இருந்த அளவு வாய்ப்பு இல்லை என்பது உண்மை தானே?" என கேட்க,

"சீசன்தான்" நான் படுகிழவியாகும்வரை கவர்ச்சி ஆட்டம் போட முடியுமா. ஏதோ முறையா நாட்டியம் கற்றுக் கொண்டிருப்பதால் எவ்வளவு கஷ்டமான நடனம் என்றாலும் ஆடிவிடுகிறேன். இப்பக் கூட ஐந்தாறு தமிழ்ப் படங்கள், ஆறு தெலுங்குப் படங்களில் நடிக்கிறேன்.

"உங்களுக்கு கல்யாணம் ஆகி, நீங்களும் உங்கள் அக்கா ஜோதி மாதிரி செட்டில் ஆகி விட்டதாக கேள்விப்பட்டேன். நிஜம்தானா?"

இதைக் கேட்டதும், "நோ... சுத்த டுப். என் கல்யாண விஷயமா எங்க அம்மாதான் பைனல் முடிவு எடுப்பாங்க. அப்புறம்



ஜோதிலட்சுமி

முறையா அழைப்பு அனுப்பி, சாப்பாடு போட்டு முறைப்படி கல்யாணம் செஞ்சுக்குவேன். இதுமாதிரி கண்டவங்க சொல்றதை நம்பாதீங்க.

நல்லவேளை என் கிட்டயே கேட்டீங்க. கிசுகிசுவை கிளப்பி விடாமே. அதுக்கு ரொம்ப தாங்க்ஸ்" என்று கூறி வணக்கம் என்றார் ஜெயமாலினி.

(ல—10)

# கசிப்பு ஒழிப்புக்கு வடக்கில் ஏற்பாடு

## உற்பத்தி விற்பனையை ஏற்கனவே கைவிட்டவர்வர்களுக்கு

### அரசாங்க அதிபர் பாராட்டு

கசிப்பு உற்பத்தி, விற்பனையை யாழ். மாவட்டத்தில் ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்திருக்கிறார் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா.

யாழ். மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரித்து வருவதனால் காலக்கிரமத்தில் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதுடன் இளைஞர்களும், போதைப் பழக்கத்திற்கு ஆளாகும் அபாய நிலை ஏற்படுகிறது. இதனால் கசிப்பு உற்பத்தியைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

படுத்தும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

தற்போது கிராமம், கிராமமாகக் கசிப்பு வியாபாரம் வேகமாக ஆதிக்கம் பெற்று வருகின்றதென்றும், இதனால் நாளாந்தம் பல அப்பாவிகளின் உயிர் பலியாவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது என்றும் இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.


இதனைத் தொடர்ந்து சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், தொண்டர் இயக்கத்தவர்கள், கிராமப் பிரமுகர்கள், மதப் பிரமுகர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டிருப்பவர்களின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்து உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பிக்கும் பொறுப்பை யாழ். மாவட்டத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுள்ளன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் தொண்டர் ஸ்தாபனங்களின் முயற்சியைத் தொடர்ந்து சுமார் இருபது கசிப்பு உற்பத்தியாளர்கள், கசிப்பு உற்பத்தியைக் கைவிட்டுள்ளனர் என்று இந்த மாநாட்டில் கலால் பகுதி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஆர். ராஜு தெரிவித்தார்.

இதனை இதர கசிப்பு உற்பத்தியாளர்களும் பின்பற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த அரசாங்க அதிபர் ஏற்கனவே கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் கைவிட்டவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

(ல)



யிலேயே கேளுங்கள்" என்றாராம்.

"உங்கக்கா ஜோதி லட்சுமியுடன் அடிக்கடி மோதிக்கொள்கிறீர்களாமே. உண்மையா?" என்று கேட்க,

"நடிப்பு யோதல்தானே.

...சுத்த டூப். என் கல்யாண விஷயமா எங்க அம்மாதான் பைனல் முடிவு எடுப்பாங்க. அப்புறம்

...தாங்கலே என்று கூறி வணக்கம் என்றார் ஜெயமாலினி.

(ல—10)

## மகேந்திரனை மிரட்டிய பெண்

ஓய். ஜி. மகேந்திரன் வக்கீல். ஒரு வழக்கில் பாதிக்கப்பட்ட கண்ணகி என்ற பெண் அவருக்கு டெலிபோன் செய்கிறாள்.

இன்று உன்னை கொலை செய்யப் போகிறேன்" என்று டெலிபோனில் மிரட்டுகிறாள்.

அதை கேட்டு ஓய். ஜி. மகேந்திரன் அதிர்ச்சி அடைகிறார். உடனே பொலீஸுக்கு தகவல் தெரிவித்தார். பொலீஸார் அவருக்கு பாதுகாப்பு கொடுக்கிறார்கள்..

பொலீஸார் அருகில் இருந்தும் ஓய். ஜி. மகேந்திரன் கொலை செய்யப்படுகிறார்.

இப்படி ஒரு காட்சி வி. வி. கிரியேசன்ஸ் தயாரிக்கும் "வீட்டுக்கு ஒரு கண்ணகி" படத்திற்காக படமாக்கப்பட்டது.

இதில் மற்றும் விஜய்காந்த், ஜெய்சங்கர், ரவீந்தர், சங்கிலி முருகன், மூர்த்தி, சுஜாதா, நளினி, இளவரசி, சத்யகலா ஆகியோர் நடிக்கிறார்கள்.

சங்கர் – கணேஷ் இசை அமைக்கிறார். கேசவன் ஒளிப்பதிவு செய்கிறார். ஷோபாவின் கதைக்கு, திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார் எஸ். ஏ. சந்திரசேகர்.

(ஜ—10)



"என்னை இப்படித் தூக்கியெறிந்து விட்டுப் போகிறீரே... இது நியாயமா?" என்று கேட்கிறாரோ நளினி. படம். "நியாயம்"

(ஜ—10)

## கராத்தேமணிக்கு எதிராக சதி!

"கராத்தே" போட்டி என்றால் அதில் கலந்து கொள்ளும் கராத்தே மணிக்கே வெற்றி-

வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் கராத்தே மணி மீது பொறாமை கொண்டான் வில்லன்.

கராத்தே மணியின் கராத்தே பயிற்சி நிலையத்தை அடித்து நொறுக்கி நாசமாக்க சதித் திட்டம் வகுத்தான் வில்லன்.

திட்டப்படி ஒரு நாள் "திலர்" என்று கத்தி, கம்பு, கடப்பாரைகளுடன் ஒரு ரவுடிக் கும்பல் பயிற்சி நிலையத்தினுள் புகுந்தது.

புகுந்த கும்பலை கராத்தே மணி எதிர்த்து நின்று ஓட, ஓட விரட்டி அடித்தார்.

இந்த சண்டைக் காட்சி பிரகாஷ் படப்பிடிப்பு நிலையத்தில் "தங்கக் கோப்பை" என்ற படத்துக்காக படமானது. இத்துடன் இதே படத்துக்காக ராதாரவி — அனுராதா "திலர்" திருமணம் செய்து கொண்டு "நம்ம ஊரு மதுரை நான் புடிச்ச குதிரை, ஏய் வாடிப் பட்டி வாடி குட்டி அத்தை பெத்த வெல்லக்கட்டி..." என்று பாட்டுப் பாடி ஆட்டம் போடும் காட்சியும் படமானது.

"கராத்தே" கலையின் பெருமையை விளக்கும் இந்துப் படத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த கராத்தே வீரர்களும் நடிக்கிறார்கள்.

## 'இதயம் தாங்குமா?'

ஸ்ரீஎல்லம்மன் புரொடக்சன்ஸ் படக்கம்பெனியார் "இதயம் தாங்குமா? என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள்.

திரைப்படக் கல்லூரியில் பயின்ற தொழில் நுட்ப கலைஞர்கள் பங்கு பெறும் இதன் கதை – வசனத்தை எழுதி இயக்கும் பொறுப்பை புதிய இயக்குநர் அமல்ராஜ் ஏற்றுள்ளார். நடிகர் – நடிகைகள் தேர்வு வேகமாக நடந்து வருகிறது.

எஸ். வி. சேகர், நாகராஜ சோழன், கே. ஆர். விஜயா, நளினி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கலைஞானம் கதைக்கு தூயவன் வசனம் எழுத, வில்வம் நடராஜ் ஒளிப்பதிவு செய்கிறார். இசை: சங்கர்—கணேஷ். டைரக்ஷன். ஆர். சி. சக்தி. விரைவில் திரைக்கு வருகிறது "தங்கக் கோப்பை".


(ஜ—10)

இதனால் கசிப்பு உற்பத்தியைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இலங்கை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் இது தொடர்பாக மாநாடொன்று நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களும், திணைக்களத் தலைவர்களும், பொலீஸ் கலால் பகுதி அதிகாரிகளும் சமுகம் அளித்திருந்தனர்.

கசிப்பு உற்பத்தியை தடுத்து நிறுத்துவது பற்றி இம்மாநாட்டில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது. கசிப்பு உற்பத்தியாளர்கள் பணத்திற்காகச் சமுதாயத்தை பலியிட முயலுகின்றார்கள் என்றும்; இது மிகவும் அபாயகரமான நிலையை ஏற்



மானிய அடிப்படையில் வள்ளங்கள், தோணிகளை வங்கிக் கடன் பெற்று வாங்கிய கல்குடாத் தொகுதி மீனவர்கள் கடனைக் கட்டத் தவறியதால் அவர்களின் நூற்றுக்கணக்கான வள்ளங்களும், தோணிகளும் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டன.

மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம், வாழைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கே. பாலசிங்கம், வங்கித் தலைமைக் காரியாலய உத்தியோகத்தர்கள், வங்கிப் பாதுகாவலர்கள் ஆகியோர் இவற்றைத் தடுத்து வைத்திருப்பதைப் படத்தில் காண்க.

(ல—319)

(படம்: வாழைச்சேனை 'தினபதி நிருபர்.]

## மன்னார் கல்வி அபிவிருத்திக்கு ▪▪▪▪
# ஒதுக்கப்பட்ட நிதி
## பயன்படுத்தப்படாதது குறித்துக் கவலை

பேசாலை, ஜூன் 24

உலக வங்கியின் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் கல்வித் திணைக்களத்திற்கு, அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் கச்சேரியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் தொடர்பான மாநாட்டிலேயே இவ்வாறு கவலை தெரிவிக்கப்பட்டது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் தலைமையில் மாநாடு நடைபெற்றது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி குணசிங்கம் உட்பட சகல திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமத் திட்டத்தின் கீழ் இதுவரை நடைபெற்ற அபிவிருத்தி வேலைகள் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்பட்டது.

கல்வித் திணைக்களத்தின் சார்பில் மன்னார் பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி. பி. ஆறுமுகம், கல்வி அதிகாரி ஜனாப் இசட். ஏ. றகீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட வேலைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வேளையில் மன்னார் கல்வித் திணைக்களம் முதற் கட்ட வேலைகளை இதுவரை நிறைவேற்றவில்லையென அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

(எ—251)

## கடன் வழங்குவது தாமதமாவதேன்?

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவுக் கல்வித் திணைக்களத்தில் இயங்கும் கடன் வழங்கும் சபை ஆசிரியர்களுக்குரிய கடன்களை வழங்குவதில் அசிரத்தை காட்டி வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

(எ—198)

## வெளியரங்கு

சித்தன்கேணி, ஜூன் 24

அராலி இந்துக் கல்லூரிக்கு ஒரு திறந்த வெளியரங்கு அமைப்பதென பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இவ் வேலைகளுக்கான பணத்தை அன்பளிப்புச் செய்ய பலர் முன்வந்துள்ளனர்.

அராலியைச் சேர்ந்த திரு. எஸ். ஜெயரத்தினம் 8 ஆயிரம் ரூபாவும் கல்லூரி உப அதிபர் திரு. எஸ். டானியல் ஆயிரம் ரூபாவும் நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ல—283)




தூரமான
22 கரட் தங்க
நகைகளுக்கு...



ஏ. கே.
கோல்ட் ஹவுஸ்
இல. 79, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தொலைபேசி:- 28991 — 33712

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 25 —
சுடர் 17 கதிர் 2710

## பிரதமரும் கிராம எழுச்சியும்

வயதானவர்களும் குழந்தைகளின் கண் கொண்டே உலகத்தைப் பார்க்க வேண்டும் என்று புத்திமதி கூறினார் பிரதமர் ஆர். பிரேமதாச.

குழந்தைகளின் கண் கொண்டு உலகத்தைப் பார்த்தால் போட்டி, பொருமை, பிரிவினை, பாரபட்சம் எதுவும் தெரியமாட்டா.

மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு ஏற்ற இடமாகவே உலகம் காணப்படும்.

இப்படி உலகத்தைக் காணவே தாம் விரும்புவதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

அதுவே தமது 60ஆவது பிறந்த நாள் பிரதிக்ஞையும் ஆகும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பிரதமர் 60 வயதை அடைந்தார்.

தமது 60ஆவது பிறந்த தினத்தைப் பிரதமர் அனுராதபுரத்தில் "கம் உதாவ" என்று வழங்கப்படும் கிராம எழுச்சிக் கண்காட்சியைத் திறந்து வைப்பதன் மூலம் கொண்டாடினார்.

கிராம எழுச்சித் திட்டத்தை ஆரம்பித்தவரே பிரதமர்தான்.

மக்களிடையே உள்ள சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கி எல்லோரும் எல்லாம் பெற்று இன்பமாக வாழ வழி செய்வதற்காகவே பிரதமர் கிராம எழுச்சித் திட்டத்தை உருவாக்கினார்.

கிராமங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாடு முழுவதையும் அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையிலேயே

# கருணாநிதிக்கு கடவுள் அளித்த தண்டனை

## எம். ஜி. ஆர். தரும் விளக்கம்

சென்னை, ஜூன் 24

எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் போய் இப்போது மேலவைக்குச் சென்றிருக்கிறார் கருணாநிதி. அதுதான் ஆண்டவன் அவருக்கு அளித்த தண்டனை.

இவ்வாறு கூறினார் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

அ. தி. மு. க. பிரமுகர் எஸ். எம். துரையரசன் மகள் அழகுசுந்தரிக்கும் முறையூர் வீர சொக்கலிங்கம் சேர்வை மகன் சண்முகசுந்தரத்துக்கும் அண்மையில் சாலிக் கிராமம் ஜெனரல் கரியப்ப உயர்நிலைப் பள்ளியில் திருமணம் நடைபெற்றது.

இத்திருமணத்தை முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். நடத்தி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:—

### கதி தெரியுமா?

துரையரசன் தம்பிக்கு ஏற்பட்ட ஆபத்து பற்றி இங்கே பேசினார்கள். இது மட்டுமா? விரல்கள் வெட்டப்பட்டு மருத்துவமனையில் கழகத் தோழர் இருக்கிறார். வீடுகள் எரிக்கப்படுகின்றன. ஆட்களை வைத்து கொலை செய்து தூக்கி எறிந்து விடுகிறார்கள்.

இத்தனைக்கும் நாங்கள்தான் ஆட்சியில் இருக்கிறோம். காவல் துறை பொறுப்பு என்னிடம் தான் உள்ளது. ஆனால் அராஜகம் நடப்பதாக கருணாநிதி கூறுகிறார். துரையரசன் தம்பியை நானா வெட்டினேன்? இத்தனையும் செய்து விட்டு ஆத்திரப்படுகிறார்கள்.

தமிழகம் பஞ்சாப் ஆகும் என்று கருணாநிதி பேசினார். பிந்தரன்வாலே என்ன ஆனார்? வரலாற்றைப் பார்க்க வேண்டும். எதையும் பேசுவது எளிது. நான் கூட முன்பு காமராசரை எதிர்த்து ஒரு கருத்து சொன்னேன்.

### சிரமம் தெரிகிறது

ஆட்சிக்கு வந்த பின் தான் அதில் உள்ள சிரமம் தெரிகிறது. உலக வங்கி பஸ் கட்டணத்தை உயர்த்தினால்தான் மேலும் நிதி தருவோம் என்கிறது.

சென்னை நகர அபிவிருத்திக்கான ரூபா 59 கோடி திட்டம் கூட இதனால் தான் நிற்கிறது. ரூபா 500 கோடிக்கு மேல் நமக்கு தருகிறேன் என்று சொன்ன நிதி, பஸ் கட்டணத்தை உயர்த்தாததால் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

ஆனால் இங்கு பஸ்ஸை தேசியமயமாக்கு என்று ஒரு புறம் கூறுகிறார்கள். மறுபுறம் பஸ்



எம். ஜி. ஆர்.

கட்டணத்தை உயர்த்தினால் போராடுவோம் என்கிறார்கள்.

இப்படி விளையாடுபவர்கள் கட்சியை வளர்க்கத்தான் பயன்படுத்துகிறார்களே தவிர மக்களுக்கு பயன் கிடைப்பதைப் பற்றி கவலைப்படுபவர்களில்லை.

### மக்கள் பிரதிநிதி

ஒரு தலைவர் ஆட்சிக்கு வரு முன் தான் கட்சியின் பிரதிநிதி. ஆட்சிக்கு வந்து விட்டால் மக்கள் பிரதிநிதி என்று அண்ணா சொல்வார்.

இந்து மதம் ஒரு நல்ல காரியத்தை செய்தது என்பதற்காக ஆதரித்தால் உடனே முஸ்லிம் எதிரி என்கின்றனர். அதுபோல் முஸ்லிம்களுக்கு சலுகை செய்தால் உடனே இந்து எதிரி என்கின்றனர்.

கிறிஸ்தவர்களுக்கு சலுகை செய்தால் இவர் அந்தப் பக்கம் போய் விட்டார் என்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான்.

ஜனநாயகம் செத்து விட்டது என்கிறார் கருணாநிதி. நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும் போது எவ்வளவு கொடுமைகளை சந்தித்தோம். அந்த நிலையா இப்போது உள்ளது?

இந்த பகுதியில் அப்போது நான் கொடியேற்ற வந்த போது என் மீது சரமாரியாக கல் வீசினார்கள். அப்போது டி. எஸ். பி. ஒருவர் பாதுகாப்புக்கு இருந்தார்.

அவர், நான் சிறு சேமிப்பு துணைத் தலைவராக இருந்த போது எனக்கு பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவர்.

ஆனால் அவர் அன்று நடந்த சம்பவங்களை பார்த்துக் கொண்டு பேசாதிருந்தார்.

அதற்குக் காரணம் அவருக்கு அன்று இடப்பட்ட உத்தரவு அப்படி. இன்று அந்த நிலைமையா இருக்கிறது?

### மறப்பார்களா?

யார் அநியாயம் செய்கிறார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். கருணாநிதி செய்த அநியாயங்களை மக்கள் மறந்து விட மாட்டார்கள். சர்க்காரியா கமிஷனை மக்கள் மறந்து விடுவார்களா?

இல்லை பூலாவரி சுகுமாரன் கொலையை மக்கள் மறந்து விடுவார்களா? பூலாரி சுகுமாரன் தங்கை இன்று அமைச்சராக இருக்கிறார். இதுதான் வரலாறு.

தவறு செய்தவர்கள் சமுதாயத்திலேயே தண்டிக்கப்படுகிறார்கள்.

என்னைக் கட்சியை விட்டு விலக்கி சட்ட சபையில் இரு சபாநாயகர்களை வைத்து சபையை நடத்தி, மைக்கை உடைத்து அன்று அமளி ஏற்படச் செய்தார் கருணாநிதி.

அப்படிப்பட்டவர் என் எதிரிலேயே எதிர்க்கட்சித் தலைவராக உட்கார்ந்திருந்ததையும் பார்த்தேன். அதுதான் அவருக்கு தண்டனை.

இப்போது அதுவும் போய் மேலவைக்கு சென்றிருக்கிறார். இதுதான் கடவுள் பெயரால் மக்கள் தரும் தண்டனை.

நம்மை மீறி ஒரு சக்தி இருக்கிறது. பெரியவர்களை தாய், தந்தையரை கடவுளாக மதிக்க வேண்டும். உதாரணத்திற்கு இந்த மைக் பழுது பட்டால் அந்த மைக் பழுது பார்க்கத் தெரிந்தவர்தான் பார்க்க வேண்டும்.

இதுபோல் ஒவ்வொருவரும் நம்மை விட ஏதோ ஒரு வகையில் சிறந்தவர்களாக இருப்பார்கள். பிறரை மதிக்க வேண்டுமென்ற உணர்வு வேண்டும்.

இவ்வாறு எம். ஜி. ஆர். பேசினார். (ல—10)

## நாட்டைச் சீரழிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை விளைவிக்க சில சக்திகள் பின்னணியில் செயல்பட்டு வருகின்றன.

இச் சக்திகள் வதந்திகளைப் பரப்புகின்றன. அதன் மூலம் மதவாதிகளையும், மாணவர்களையும், தொழிலாளர்களையும் கிளர்ந்து எழத் தூண்டி விடுகின்றன.

நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் கட்டிக் காக்க

நாம் அடைந்திருக்கும் சாதனைகள், எமது எதிர்காலத்திற்கு திறந்து விடப்பட்டிருக்கும் கண்களாகும். கடந்த 60 ஆண்டுகளாக கிராமோதய இயக்கம் இயங்கி வந்திருக்குமாயின் நாம் எவ்வளவு உயர்வான சாதனையைப் பெற்றிருப்போம்?

தேவையும், சமத்துவமின்மையுமற்ற ஒரு சமுதாயத்தை நாம் 60 ஆண்டுகளில் கண்டிருப்

திட்டம்தான் இந்த சிறிய நாட்டில் இரு பூதாகாரமான திட்டங்களை மேற்கொள்ள வழி வகுத்தது.

ஒன்று தேசிய ரீதியிலானது; மற்றது சர்வதேச ரீதியிலானது.

மாதிரிக் கிராம அனுபவத்தின் மூலம் 10 லட்சம் வீடுகள் கட்டுவது தேசிய அளவிலானதாகும். இரண்டாவது வீடற்றவருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்குமுகமாக "சர்வதேச வீடற்றோர் ஆண்டு" ஒன்றைப் பிரகடனப்படுத்துவதற்கு சர்வதேச அளவிற்கு அழைப்பு விட வழி

## மீண்டும் நாளை...


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார்.

இறந்த மாணவரின் பிரேதத்தை பேராதனைப் பல்கலைக் கழக வைத்தியபீட சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் சந்திரா அமரசேகரா பரிசோதனை செய்தார்.

இவரது அறிக்கை இன்னும் இரண்டொரு தினங்களில் சமர்ப்பிக்கப்படும்.

பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் திரு. பீ. எல். பண்டித்தரத்ன செவ்வாய்க்கிழமை நடைபெறும் விசாரணையில் தொடர்ந்து சாட்சியம் அளிப்பார். (ண—105)



# செய்தித் திரட்டு

## முடிவு

சித்தன்கேணி, ஜூன் 24

யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் வங்கிகள் மூலம் சம்பளம் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்தகவலை யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க வைத்திய பொறுப்பதிகாரி திரு. எஸ். சிவகுரு தெரிவித்தார். (ல—283)

## சுகாதார வாரம்

வவுணதீவு, ஜூன் 24

மட்டக்களப்பு, வலையிறவு அபிவிருத்தி சபை உப அலுவலக பிராந்திய பாடசாலைகளில் எதிர் வரும் ஜூலை 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை சுகாதார வாரம் ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கிறது.

இதனையொட்டி பாடசாலைகளில் மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை, சிரமதானம், திரைப்படக் காட்சி, பேச்சு, கட்டுரைப் போட்டி என்பன இடம்பெறும்.

இத்தகவலை இப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் ஜனாப் ஏ. எல். புகாரி தெரிவித்தார். (ல—318)

## புனரமைப்பு

வெலிகாமம், ஜூன் 24

அம்பாந்தோட்டை மாவட்டத்தில், நான்கு உதவி அரசாங்க அதிபர் பகுதிகளில் ஒன்பது குளங்கள் புனரமைக்கப்படும்.

இதற்கென அரசாங்கம் 29 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி இருக்கிறது. (ல—331)

## மடம்

பேசாலை, ஜூன் 24

திருக்கேதீஸ்வர ஆலயச் சுற்றுடலில் மேலும் ஒரு அன்னதான மடம் அமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சித் திணைக்கள அன்னதான சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ல—251)

...தையும் அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையிலேயே பிரதமர் கிராம எழுச்சித் திட்டத்தை உருவாகினார்.

குருநாகல் தொகுதியில் உதாகம மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டதோடு கிராம எழுச்சித் திட்டம் செயற்படத் தொடங்கியது.

பிரதமர் 60 வயதை அடைந்த கடந்த சனிக்கிழமை கிராம எழுச்சித் திட்டம் ஆறு வயதைப் பூர்த்தி செய்தது.

அதையொட்டி அனுராதபுரத்தில் நடைபெற்ற கண்காட்சியைத்தான் பிரதமர் திறந்து வைத்துப் பேசினார்.

தமக்கு ஆறு வயதாகவும் கிராம எழுச்சித் திட்டத்துக்கு 60 வயதாகவும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமரின் கிராம எழுச்சித் திட்டம் இந்தக் குறுகிய காலத்துள் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் பயன் அளித்திருக்கிறது.

இதுவரை 287 மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு விட்டன.

பத்துலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்துக்கு உந்து சக்தியாக விளங்குவது கிராம எழுச்சித் திட்டம்தான் என்று பிரதமர் தெரிவித்தார்.

வீடற்றவர்களுக்கு வீடு கிடைப்பதற்கென்று ஒரு ஆண்டைச் சர்வதேச ரீதியாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று பிரதமர் ஐக்கிய நாடுகள் சபைக்கு வேண்டுகோள் விடுத்தார். கிராம எழுச்சித் திட்டம்தான் அதற்கும் காரணமாக இருந்தது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

1987ஐ சர்வதேச வீடமைப்பு ஆண்டாக ஐ. நா. இப்போது பிரகடனப்படுத்தியிருக்கிறது.

வீடமைப்புத் துறையிலும் கிராம எழுச்சித் திட்டத்திலும் உலக நாடுகளுக்கு எல்லாம் இலங்கை முன்னோடியாக விளங்குகிறது என்றால் அது பெருமைக்குரிய விஷயம் அல்லவா?

இலங்கையின் 10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

நாட்டு மக்களுக்கு வீடும் நல் வாழ்வும் அளிப்பதோடு உலகின் கவனத்தையும் ஈர்க்கும் ஒப்பற்ற கிராம எழுச்சித் திட்டம் பிரதமரின் கண்காணிப்பில் பெரு வெற்றி ஈட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

எழத் தூண்டி விடுகின்றன.

நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும் கட்டிக் காக்க மக்கள் இந்த அரசை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்திருக்கின்றனர்.

உண்மைக்கும், அகிம்சைக்கும், ஒழுக்கத்திற்கும் நாம் கட்டுப்பட்டவர்கள். இதற்கு மாறான சக்திகளுக்கு நமது நாட்டையும், மக்களையும் தாரை வார்க்க இடமளிக்கக் கூடாது.

இந்த எண்ணத்தோடு எம்மை ஆதரிப்போரை அரவணைத்து எதிர்க்கும் சக்திகளை முறியடிப்பதில் நாம் ஒன்று பட்டு போராட முன்வர வேண்டும்.

கிராமோதய இயக்கம் இன்று ஆறுவது ஆண்டைப் பூர்த்தியடைகிறது. நானும், எனது அறுபதாம் ஆண்டு பிறந்த நாளை இன்று அடைகிறேன்.

நான் இன்று ஆறு வயதுடையவனாகவும், கிராமோதய இயக்கம் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதாகவும் இருக்குமானால் எப்படி இருக்குமென நினைக்கிறீர்கள்?

ஆறு வயதுடையவனாக நான் இருப்பின், இந்தக் கண்காட்சியைக் கண்டு களித்திருப்பேன். கவலைகளிலும், சுமைகளிலும் இருந்து விடுபட்டவனாக, சுதந்திரமாக மகிழ்ச்சியில் திளைத்திருப்பேன்.

மக்கள் மத்தியில் காணப்படும் அற்ப போட்டி, பொறாமைகளைப் பற்றிக் கவலைப்பட்டிருக்க மாட்டேன். மக்கள் மத்தியில் எவ்வாறு பேதங்களைக் கண்டறிவது என்பதை அறிந்திருக்க மாட்டேன்.

அவர்கள் பணக்காரர்களா? வறியவர்களா? எனத் தெரிந்திருக்க மாட்டேன். அல்லது அவர்கள் எந்த நாட்டினர் என்பதையும் கண்டறிந்திருக்க மாட்டேன். அப்படியானால் எல்லா மக்களும் எனக்கு ஒன்று பட்டவர்களே.

இந்தியாவின் மிகப் பெரும் தலைவரான பண்டிட் ஸ்ரீஜவஹர்லால் நேருவை நான் இங்கு நினைவுகூர வேண்டியவனாகிறேன். அவர் சிறுவர்கள் மத்தியில் ஒரு முறை பேசும் போது, தாம் என்றும் சிறுவனாகவே இருக்க விரும்புவதாகக் கூறினார்.

சிறுவர்களுக்குப் பொறாமை, குரோதம், விரோதம், குரூரம் என்பவை தெரியாது என்பதாலேயே அவர் என்றும் சிறுவனாக இருக்க விரும்பினார்.

சமூக, பொருளாதார பாகுபாட்டை இல்லாது ஒழிப்பதே கிராமோதய இயக்கத்தின் பிரதான நோக்கமாகும். கிராம அபிவிருத்தியின் மூலம் முழு நாட்டையும் அபிவிருத்தி செய்வது அதன் எண்ணமாகும்.

தேவையும், சமத்துவமின்மையுமற்ற ஒரு சமுதாயத்தை நாம் 60 ஆண்டுகளில் கண்டிருப்போம்.

நமது மன்னர்கள் காலத்தில் ஒரு கதை உண்டு. அனுராதபுரத்திலிருந்து பொலன்னறுவை வரையிலும் ஒரு கோழி கூரைகள் மீதே நடந்து செல்லுமாம். அது கீழே இறங்காது. இவ்வாறு கூரைகள் மீதே நடந்து செல்லுமாம்.

அன்று வீடமைப்பு எவ்வாறு இருந்ததென்பதை எடுத்துக் காட்டுவதாக இது இருக்கிறது.

கிராமோதயத் திட்டம் கடந்த அறுபது ஆண்டுகள் இயங்கி வந்திருக்குமானால் அந்தக் கோழி இந்த நாட்டின் சகல பகுதியையும் கீழே இறங்காமலேயே கூரைகள் மீதே சுற்றி வந்திருக்கும். இலங்கையில் வீடமைப்பு அந்தளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கும்.

எப்படியானாலும் இந்த இரு பங்களிப்புகளையும் திருப்பி விட முடியாதென்பது எனக்குத் தெரியும். நான் மீண்டும் ஆறு வயதை அடைய முடியாது. கிராமோதய இயக்கம் அறுபது ஆண்டுகளை அடைய இன்னும் நீண்ட காலம் செல்ல வேண்டும்.

ஆனால், நான் ஆர்வம் கொண்டால் அதனை ஆறு வயது சிறுவனின் கண்களின் மூலம் உலகில் காண்பேன். அப்பொழுது பிரிவினையும், பாகுபாடும் அற்ற ஒரு உலகினை நான் காண்பேன். இதுவே எனது பிறந்த தின பிரகடனம் என்பதை நான் மிகவும் தாழ்மையாகக் கூறிக் கொள்ள விழைகிறேன்.

இதேவேளை, இலங்கை அறுபது ஆண்டுகளை அடையும் போது கிராமோதய இயக்கம் எப்படியிருக்கும் என்பதையும் கற்பனை செய்து பார்க்கிறேன். அப்பொழுது பூரணத்துவமிக்க, மகிழ்ச்சிகரமான ஒரு சமூகத்தை நாம் கொண்டிருப்போம்.

எவ்வாறான ஒரு வாழ்க்கைக்காக நாம் ஏங்கித் தவிக்கிறோமோ, அந்த வாழ்க்கையின் தரத்தை நாம் எய்தியிருப்போம்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறு கிராமமான பத்தேகமையில் கிராம எழுச்சி இயக்கம் ஆரம்பமானது. குருநாகல் மாவட்டத்தில் யாப்பாஹுவ தேர்தல் தொகுதியில் பத்தேகமையில் இருக்கிறது.

முதல் மாதிரிக் கிராமம் என்பதால், அதற்குப் பொருத்தமாக "உதாகம" (கிராமோதயம்) எனப் பெயரிடப்பட்டது. "உதாகம" என்பது "மீள் எழுச்சியுற்ற கிராமம்".

இந்த இயக்கத்தின் மூலம் இன்று 287 மாதிரிக் கிராமங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் உருவாகியுள்ளன.

இந்த மாதிரிக் கிராமத்

...குழுக்களாக சர்வதேச வீடற்றோர் ஆண்டு ஒன்றைப் பிரகடனப்படுத்துவதற்கு சர்வதேச அளவிற்கு அழைப்பு விட வழி வகுத்தது.

1984 ஆம் ஆண்டு நமக்கு இரு வழிகளில் முக்கியத்துவமானதாகும். இந்த ஆண்டு ஜனவரியில்தான் 10 லட்சம் வீடமைப்புத் திட்டத்தை துவக்கி வைத்தோம். இந்தப் பாரிய திட்டத்தை நம் மக்கள் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

5 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை இலங்கை எப்படிப் பூர்த்தி செய்யும் என உலக மக்கள் ஆச்சரியமாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

முன்னைய ஒரு லட்சம் வீட்டுக்குரிய அளவு மூலவளங்களையே வைத்துக் கொண்டு 10 லட்சம் வீடுகளை எப்படிப் பூர்த்தி செய்யப் போகிறோமென அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர்.

அது ரகசியமானது. உபாயம் நிறைந்ததாகும். அரசினதும், மக்களினதும் பங்களிப்பிலேயே அந்தத் தந்திரம் தங்கியிருக்கிறது.


எமது பங்களிப்பில் உலக நாடுகளையும் பங்கேற்க அழைக்கிறேன். வீடற்றோருக்கு வீடுகள் அளிக்க வேண்டும்.

வீடற்றோருக்கு நிலமவ்க்..சே

வீடற்றோருக்கு வீடு அளிக்கும் சர்வதேச ஆண்டாக 1987 ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் பிரகடனப்படுத்தி இருப்பது எனது கோரிக்கையே யாகும்.

இப்படி பிரதமர் சொன்னார்.

(ண-ங)



மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய சாரணர் பயிற்சி முதலாம் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்ட பிரதம கல்வி அதிகாரி திரு. த. கிருபைராஜா உரையாற்றுகிறார்.

அருகில் இ. பி. சாரண ஆணையாளர் திரு. விஜித தரணியகல, மாவட்ட ஆணையாளர் ஜனாப் கப்வின் சாம்ஷன் ஆகியோர் காணப்படுகிறார்கள்.

(ல-318)

படம். இரா. உதயகுமார்.

இதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சித் திணைக்கள அன்னதான சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ல-251)

## நடவடிக்கை

வவுணதீவு, ஜூன் 24

மட்டக்களப்பு கடைத் தெருவில் உப தபால் நிலையமொன்றைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. கே. நவரெத்தினம் மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பாக பிரதேச அபிவிருத்தி அமைச்சர், திரு. செ. இராசதுரை தபால், தந்தி, தொலை தொடர்பு அமைச்சரை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ல-318)

## மகோற்சவம்

சித்தன்கேணி, ஜூன் 25

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 25ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இக்கோவில் தேர்த் திருவிழா ஜூலை 4 ஆம் திகதி புதன் கிழமையும், தீர்த்தத் திருவிழா 5 ஆம் திகதி வியாழக்கிழமையும் பூங்காவனத் திருவிழா 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

இவ் உற்சவ காலங்களில் பக்தர்களின் நலன் கருதி வட்டு சிவன் தேவஸ்தான தொண்டர் சபையினர் பல்வேறு வசதிகளைச் செய்யவிருக்கிறார்கள்.

(ல-283)

## சிரமதானம்

பேசாலை, ஜூன் 24

மன்னார் கிழக்கு கிராமோதய சபை, மன்னார் மூர்வீதி, மூர்வீதி ஒழுங்கை ஆகியவற்றை சிரமதானம் மூலம் அமைக்கவிருக்கிறது.

இத்தகவலை மன்னார் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் ஜனாப் எச். எம். நிசாம் தெரிவித்தார்.

(ல-251)

## தட்டுப்பாடு

மாவனல்லை, ஜூன் 24

மாவனல்லை பகுதி தபால் நிலையங்களில் ஐம்பது சத முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஐம்பது சத முத்திரைக்குப் பதிலாக 60 சத, ஒரு ரூபா முத்திரைகளை வாங்க வேண்டி இருப்பதாக இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்

(ல-188)

# புனித ரமழான் சிந்தனைகள்

படைப்புக்கள் ஒவ்வொன்றையும் சில வஸ்துக்களைக் கொண்டு அல்லாஹுத்தஆலா அழகுறச் செய்கிறான். சான்றாக, வானத்தை சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றைக் கொண்டும், பூமியை, பசுமையான வேளாண்மைகளைக் கொண்டும், நாட்களை, நல்ல பல செயல்களைக் கொண்டும் அழகுறச் செய்திருக்கிறான்.

அவ்வாறே, இந்த ரமழான் மாதத்தை அருளும் அகமியமும், இறைத்தன்மையும், நல்ல மல்களும், நற்பணிகளும் கொண்டு அழகுறச் செய்திருக்கிறான். இந்த அழகுச் சின்னங்களை இம்மாதத்தில் நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

ஆம்! இத்தகைய சிறப்பு வாய்ந்த ரமழானின் கடைசிப் பாகத்தில் இருக்கிறோம். ரமழானின் முதற்பகுதி வல்ல அல்லாஹுவின் அருள் சூழ்ந்தது. இது சகல முஸ்லிம்களுக்கும் பொதுவானது. பாவச் செயல்களில் ஈடுபடாத சகல முஸ்லிம்களுக்கும் அல்லாஹ் இத்தினங்களில் தனது அருள் மழையைப் பொழிகிறான்.

இரண்டாவது பகுதி அல்லாஹ்

...ளுக்கு பாவமன்னிப்பு வழங்குவதாகும்.

மூன்றும் பகுதியாகிய கடைசிப் பாகத்தில் வல்ல அல்லாஹ் பாவிகளுக்கு நரகத்திலிருந்தும் விடுதலை அளிக்கிறான். அல்லாஹுக்காக அதிகம் பேணுதலோடு நோன்பு நோற்ற பின்னர் இந்தப் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கின்றது.

கொடிய நரக நெருப்பிலிருந்தும் விடுதலை பெற வேண்டுமாயின் நாம் இத்தினங்களில் மிகவும் பேணுதலோடு நோன்பை நோற்பதுடன், நரக விடுதலையை எமக்கு அருளும்படி அல்லாஹுவிடம் நாம் அனுதினமும் துஆ இறைஞ்ச வேண்டும்.

புனித நோன்பு பாவச்செயல்களிலிருந்தும் முஸ்லிம்களை பாதுகாக்கும் ஒரு தற்பாதுகாப்புக் கேடயமாக தொழில் புரிகின்றது. எனவே நோன்பு பாவத்துக்கு மட்டுமன்றி நரக நெருப்பைவிட்டும் எம்மைப் பாதுகாக்கும் கேடயமாக மாற வேண்டுமானால் நாம் நோன்பை மிகவும் உள்ளச்சத்துடன் நோற்க வேண்டும். அவ்வாறாயின் அது நரக நெருப்பை

...கேடயமாகவும் தொழிற்படும் என்பதில் ஐயமில்லை.

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நோன்பின் இலட்சியத்தை பற்றி கூறும்போது "பொய்யையும், பொய்யைத் தழுவிய செயலையும் விடாமல், உணவையும் குடிப்பையும் விட்டுவிடுவதில் அல்லாஹுத்தஆலாவுக்கு எவ்வித தேவையுமில்லை" என்றும், "விழித்து வணங்கும் பலருக்கு கண்விழிப்பைத் தவிர வேறு எப்பலனுமில்லை. நோன்பு நோற்கும் பலருக்கு பசியையும் தாகத்தையும் சகித்துக் கொண்டத்தைத் தவிர, வேறு எப்பலனும் கிடையாது" எனக் கூறியுள்ளார்கள்.

எனவே, நாம் இதய சுத்தியுடனும், பேணுதலுடனும் நோன்பை நோற்று, நரக நெருப்பை விட்டு விடுதலை பெற, நானிலத் தலைவனிடம் இருகரமேந்தி இறைஞ்சுவோமாக!

எல்லாம் வல்ல அல்லாஹ் நாம் நோற்கும் நோன்பின் மாண்பைக் கொண்டு, எமக்கு நரக விடுதலையளித்து, நல்லடியார்கள் கூட்டத்தில் எம்மையும் சேர்த்து விடுவானாக! ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

(11)

— நஸீர் நூருல் அமீன்.

# பாரசீகத்திலிருந்து யூத சியோனிசம் வேரறுக்கப்படும் என ஈரான் சூளுரை

தெஹ்ரான், ஜூன் 24
பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் இருந்து யூத சியனிசம் வேரறுக்கப்படும்.

இப்படி ஈரானிய ஜனாதிபதி ஹொஜதுல்லா இஸ்லாம் சயத் அலி கமானி சூளுரைத்தார்.

ஈரானிய ஜனாதிபதி அலி கமானி கடந்த வெள்ளிக்கிழமை வானொலி மூலம் நடத்திய குத்பா பிரசங்கத்தின் போதே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் வானொலியில் தொடர்ந்து கூறியதாவது:—

பாரசீக வளைகுடா யுத்தத்தில் ஈரான் வெற்றிவாகை சூடிய பின்னர், இப்பிராந்தியத்தில் இருந்து யூத சியனிசத்தை நாம் வேரறுக்க வேண்டும்.

ஈரானுக்கு எதிராக ஈராக்கைத் தூண்டிவிடும் முயற்சியில் இஸ்ரவேல் ஈடுபட்டிருக்கிறது.

இஸ்ரவேலுக்கு எதிரான போராட்டத்தில் இருந்து ஈரானிய இஸ்லாமியக் குடியரசைத் திசை திருப்பும் முகமாகவே அது இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமையை அனைத்து இஸ்லாமிய நாடுகளும் சர்வதேச ஜெருஸலம் தினமாக அனுஷ்டிக்க வேண்டும்.

— இப்படி ஈரானிய ஜனாதிபதி அலி கமானி வானொலியில் கோரிக்கை விடுத்தார். (ண)


## பாரசீக பாதுகாப்பு 6 நாடுகள் மாநாடு

றியாத், ஜூன் 24
பாரசீக வளைகுடாவின் பாதுகாப்புக் குறித்து ஒரு முகமான இராணுவ தந்திரோபாயத்தை வகுப்பதற்கென பாரசீகத்தின் ஆறு நாடுகளின் இராணுவத் தலைவர்கள் நேற்று அவசர மாநாடு ஒன்றை ஆரம்பித்தார்கள்.

சவூதி அரேபியா வானொலிச் செய்தியை நேற்று ஒலிபரப்பியது.

மாநாட்டில் பஹ்ரான், குவைத், ஓமான், கட்டர், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

ஆறு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு ஒன்றுக்கான ஏற்பாடுகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ண)



கிழக்கு ஜெர்மனியில் சமீபத்தில் நடைபெற்ற பிரமாண்டமான மகளிர் ஆர்ப்பாட்டம் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள். சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் போலந்து, செக்கோசிலவேக்கியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 10,000 மகளிர் கலந்து கொண்டார்கள். (ண)

## தீ வைப்பு நபருக்கு சிறை

அம்ஸ்டர்டாம், ஜூன் 24
நெதர்லாந்தில் உள்ள பாலியல் களியாட்ட கிளப் ஒன்றுக்குத் தீவைத்த குற்றச்சாட்டின் பேரில் வேலை இல்லாத இஸ்ரவேலியர் ஒருவருக்கு 12 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

"காஸா றெஸ்லோ" என்ற இரவுக் கிளப்பின் இந்த தீவைப்புச் சம்பவத்தில் 13 பேர் மாண்டார்கள். தீவைப்புச் சம்பவம் கடந்த வருடம் டிசம்பர் 16ஆம் திகதி நிகழ்ந்தது.

கிளப்பில் சுத்தம் செய்யும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்த ஜோலான் (வயது 36) தனது வேலை நீக்கம் குறித்து வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காகவே கிளப்புக்குத் தீவைத்தார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (ண)


## சிங்கப்பூர் பொதுத்தேர்தல்

சிங்கப்பூர், ஜூன் 24
சிங்கப்பூரில் செப்டம்பர் மாதம் பொதுத் தேர்தல்கள் நடைபெறலாம்.

இப்படி இலாகாப் பொறுப்பில்லாத அமைச்சரான ஓங் டெங் சியொங் நேற்றுத் தெரிவித்தார். (ண)

பஞ்சாப் விவகாரம் குறித்து

# உலகத் தலைவர்களுக்கு இந்திரா விளக்க கடிதம்



## பொற்கோயிலை யாத்திரிகர் இன்று முதல் தரிசிக்க வசதி

புதுடில்லி, ஜூன் 24
பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பஞ்சாப் விவகாரம் குறித்து உலகத் தலைவர்களுக்கு விளக்கக் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார். புனிதநகர் அமிர்தசரஸில் உள்ள சீக்கிய பொற்கோயில் நாளை திங்கட்கிழமை யாத்திரிகர்களின் தரிசனத்திற்காகத்

கள் என்றும் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வாரம் முதல் யாத்திரீகர்கள் சீக்கிய பொற்கோயிலுக்குள் அனுமதிக்கப் படுவார்கள் என்று மாநில வானொலி செய்தி ஒலிபரப்பியது.

### தடுப்புக் காவல் கெடுபிடி

இதேவேளையில் தற்போது அமுலில் இருந்து வரும் தடுப்புக்காவல் சட்டத்தை கடுமையாக்கும் வகையில் ராஷ்டிரபதி ஸெயில் சிங் புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்.

தீவிரவாதிகளில் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதற்கான காரணம் செல்லுபடியானதல்ல எனக் காணப்பட்டாலும் அவர்களைத் தொடர்



காம்பூஷியாவில் பொல் பொட்டின் ஆட்சிக் காலத்தில் பெற்ருேர்களை இழந்த அனுதைச் சிறுவர்களுக்கான "செந்நிற ரேசா" அனுதையில்லத்தில் நடைபெறும் வகுப்பறை இது. இங்கு 5 வயது முதல். 17 வயது வரையிலான அனுதைச் சிறுவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகின்றது. (ண)

## திறந்து விடப்படும்.

கடந்த 6 ஆம் திகதி அமிர்த சரஸில் உள்ள சீக்கியரின் பொற் கோயிலை துருப்புகள் முற்றுகையிட்டன என்பது ஞாபகம் இருக்கலாம். பொற் கோயிலில் இராணுவ நடவடிக்கையை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள், சம்பவங்கள் குறித்தே பிரதமர் திருமதி இந்திரா காந்தி கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிருர்.

அமெரிக்க ஜனுதிபதி றேகன், ரஷ்ய ஜனுதிபதி கொன்ஸ்டான்டின் சேனன்கோ, பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் ஆகியோருக்கும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கடிதங்களை அனுப்பியிருக்கிருர்.

இதேவேளையில் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினுல் சுமார் 1,000 சீக்கியத் தீவிரவாதிகள் மரணமான பொற் கோயிலை பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று சனிக்கிழமை சென்று பார்வையிட்டார்.

### 800 பேர் விடுதலை

புனித நகர் அமிர்தசரஸில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2,000 சீக்கிய தீவிரவாத சந்தேக நபர்களில் சுமார் 800 பேர் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என்று அந்தப் பேச்சாளர் கூறினுர்.

பொற் கோயிலை இராணுவம் முற்றுகையிட்ட சம்பவத்தையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் சுமார் 4,800 பேர் கைதானுர்கள் என்றும் —

இவர்களில் பொலீஸாரால் நிரபராதிகளாகக் காணப்பட்டவர்கள் விடுதலையானுர் ...ந்தும் தடுத்து வைத்திருப்பதற்கு வசதியாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கைது செய்யப்படுவதற்கான உரிய காரணம் இல்லாத சந்தேக நபர்கள் முன்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

ராஷ்டிரபதியினுல் பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவு தடுப்புக் காவல் உத்தரவு காலவதியான பின்னரும் தடுத்து வைப்பதற்கும் வசதி செய்கிறது.

சீக்கியரின் அரசியல் கட்சியான அகாலி தள்ளின் தலைவர் ஹர்சந்த் சிங் லோங்கோவில் நேற்று முன்தினம் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டாராயினும் பின்னர் கைது செய்யப்பட்டார். புதிய குற்றச்சாட்டுகளின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

லோங்கோவால், துருப்புகள் தேடுதல் வேட்டையை ஆரம்பித்த போது தாமாகவே சரண் அடைந்தார் என்பது நினைவிருக்கலாம். (ண)

---

**தீப்பொறி ஏற்படுத்திய அனர்த்தம்:**

# சுரங்க விபத்தில் 21 பேர் மரணம்

## 50 பேர் தப்ப முடியாது அவதி

தைப்பீ, ஜூன் 24

நிலக்கரி ஏற்றிச் செல்லும் வாகனம் ஒன்று நிலக்கரிச் சுரங்க பாதையிலிருந்து விலகி 300 அடி ஆழமான சுரங்க வழியொன்றில் விழுந்தது. இதனுல் கிளம்பிய தீப் பொறிகள் சுரங்கத்தில் பயங்கர வெடிவிபத்து ஒன்றை ஏற்படுத்தின.

இச்சம்பவத்தில் 21 பேர் உயிரிழந்தனர். 50 பேர் சுரங்கத்தினுள் சிக்கி தப்பமுடியாதிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தாய்வானிலுள்ள ஹேய்சான் நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த புதன்கிழமை இந்த விபத்து ஏற்பட்டது.

116 சுரங்கத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த சுரங்கத்தில் இந்த வெடி விபத்து ஏற்பட்டது.

சுரங்கத்தினுள் சிக்கியுள்ள 50 தொழிலாளிகள் உயிருடன் மீட்கப்படாவிடில் இந்த விபத்து தாய்வானின் மோசமான சுரங்க விபத்தாக அமையக் கூடும்.

1971 இல் கீலங் நிலக்கரிச் சுரங்கத்தில் வாயு வெடிப்புச் சம்பவமொன்றில் 42 சுரங்கத் தொழிலாளிகள் கொல்லப்பட்டதே இதுவரை தாய்வானின் மோசமான சுரங்க விபத்தாக கருதப்படுகிறது. (ண-ந)

---

# பேருவில் கம்யூ. கிளர்ச்சி இதுவரை 3,000 பேர் பலி

நான்கு வருடங்களாக பேரு நாட்டில் இடம் பெற்றுவரும் கம்யூனிஸ் கெரில்லாக்களின் கிளர்ச்சியில் இதுவரை 3000 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

உள்துறை அமைச்சர் லூயி பெர்கோவிச் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

ஜனுதிபதி பெர்னுண்டோ பெலோண்ட டெரியின் அரசாங்கத்தைக் கவிழ்க்க மாவோ பாணியிலான செண்டரோ லூமினேஸோ மேற்கொண்டு வரும் போராட்டங்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் 1760 கொரில்லாக்களும், 1104 குடி மக்களும் 110 பொலீஸாரும் அடங்குகின்றனர். மற்றையோர் இராணுவ வீரர்கள் என நம்பப்படுகிறது.

கடந்த நான்கு வருடங்களில் கெரில்லாக்கள் 3,558 தாக்குதல்களை மேற்கொண்டார்கள் கடந்த வாரத்தில் மட்டும் 10 தாக்குதல்கள் இடம் பெற்றன. இதில் 39 பேர் இறந்தனர்.

செண்டரோ லூமினேஸோவுடன் அரசாங்கம் மேற்கொண்ட சண்டையின் போது காணுமற்போனவர்களின் உறவினர்களையும், இராணுவப் படையின் ஆணையாளர்களையும் சந்திக்க வைப்பதற்கான முயற்சிகளை தான் மேற்கொள்வதாக நீதி அமைச்சர் மக்ஸ் அரியாஸ் நிருபர்களிடம் கூறினுர்.

அவசர இராணுவக் கட்டுப்பாட்டின் கீழிருந்த அன்டியன் பிரதேசத்தில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 267 பேர் காணுமற் போயிருப்பதாக பெருவின் மனித உரிமைகள் இயக்கத்தினர் தெரிவித்திருக்கின்றனர். இடதுசாரி காங்கிரஸ் காரரும் இவ்விதமே தெரிவித்திருக்கிருர்கள். (ண-ந)

**உலகச் செய்திகள்**

---

# கருப்பையில் வைத்தே சிசுவுக்கு சத்திரசிகிச்சை

பிறீபேர்க், ஜூன் 24

தாயின் கருப்பையில் வைத்தே சிசுவின் சுவாசப் பையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. மேற்கு ஜெர்மன் டாக்டர்கள் இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்தார்கள்.

இந்தச் சத்திர சிகிச்சை மேற்கு ஜெர்மனியிலுள்ள பிறீபேர்க் நகரில் நடத்தப்பட்டது. இதன் மூலம் சிசுவின் உயிரும் காப்பாற்றப்பட்டது.

இவ்வித சத்திர சிகிச்சையொன்று ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்டது இதுதான் முதல் தடவை. இதற்கு முன் இவ்வித சத்திர சிகிச்சை அமெரிக்காவில் மட்டுமே வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்ட பேராசிரியர் ஹெல்மட் சில்லிங்கர் கூறினுர்.

பிறக்கவிருந்த சிசுவின் நெஞ்சில் திரவம் நிறைந்து வருவது வைத்திய பரிசோதனை மூலம் தெரியவந்தது.

அதையடுத்து சிசு பிரசவிப்பதற்கு 40 மணி நேரத்துக்கு முன் தாயின் கருப்பையினுள் விசேட ஊசி ஒன்றைச் செலுத்தி திரவத்தை வெளியேற்றினர்.

பிரசவத்திற்கு 30 மணி நேரத்துக்கு முன் இந்த முறை மீண்டும் தொடரப்பட்டது. அதன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்க வழி செய்யப்பட்டது.

முப்பது வயதான தாய்க்குப் பிறந்த இந்தக் குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறது என்று பேராசிரியர் சில்லிங்கர் கூறினுர். (ண-ந)

---

# மூன்று எல்லைப்புற கிராமங்களினுல் தாய்லாந்து—லாவோஸ் சர்ச்சை

பாங்கொக், ஜூன் 24

தாய்லாந்து – லாவோஸ் எல்லையிலுள்ள மூன்று கிராமங்களினுல் இரு நாடுகளுக்கும் இடையே சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

இந்த சர்ச்சை பற்றி தாய்லாந்து 40 நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை விளக்கம் அளித்தது.

இரு நாடுகளினதும் எல்லைக் கருகில் அமைந்துள்ள மூன்று கிராமங்களுக்கு உரிமை கோரி தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகளுக்கிடையே தகராறு தோன்றியிருக்கிறது.

பான் மாய், பான் லாஸ், பான் சவின்டி ஆகிய இம் மூன்று கிராமங்களும் உட்டாரடிட் மாகாணத்தின், உப மாவட்டத்தில் இருப்பதாக தாய்லாந்து கூறுகிறது. ஆனுல் இந்தக் கிராமங்கள் லாவோஸின் "அயாபோரி" மாகாணத்தில் இருப்பதாக லாவோஸ் விவாதிக்கிறது.

இந்த எல்லைச் சர்ச்சை கடந்த மே மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் ஆயுத மோதலாக மாறியது. இப்பிரதேசத்தில் வீதித் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக தொண்டர் துருப்புகளை தாய்லாந்து அடிக்கடி அனுப்பி வந்ததாலேயே இந்த நிலை ஏற்பட்டது. இந்த ஆயுத மோதல்களின் போது எவரும் கொல்லப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து இம்மாதம் முற்பகுதியில் இப்பகுதிக்கு துருப்புகளை அனுப்பியது. துருப்புகள் வெளியேற்றப்படும் வரை எல்லைப் பிரச்சினையைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லையென லாவோஸ் கூறி வந்துள்ளது.

இரு நாடுகளும் ஐ. நா. செயலாளர் நாயகம் பெரஸ் டீ குயீலருடன் வெவ்வேறுன சந்திப்புகள் மூலம் இப்பிரச்சினையைப் பற்றி பேச்சு நடத்தின.

தாய்லாந்து இப்பிரச்சினையை பேச்சுகளின் மூலமே தீர்த்துக் கொள்ள விரும்புகிறது. சண்டையின் மூலமல்ல என்று தாய்லாந்தின் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் செயலாளர் நாயகம் பிரகோஸ் சூன் சூரி ராஜதந்திரிகளிடம் கூறினுர்.

இவ்விவகாரத்தில் வியட்நாம் தலையீடு செய்கிறது என்றும், லாவோஸின் நிலைமையை அது ஊக்குவிக்க முயல்கிறது என்றும் தாய்லாந்து குற்றஞ்சாட்டியது.

லாவோஸ், காம்பூஷியா ஆகிய நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்த வியட்நாம் முற்படுகிறது. அதே சமயம் தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகளுக்கிடையிலுள்ள நல்ல உறவுகளை சீர்குலைக்கவும் அது திட்டமிட்டுள்ளது என ஐ. நா. சபையிலுள்ள நிலையான தாய்லாந்து பிரதிநிதி கூறியிருக்கிருர்.

தாய்லாந்து – லாவோஸ் எல்லைப் பிரச்சினைகள் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான தகராறு ஆகும். இதில் வியட்நாம் தலையிடக் கூடாது என தாய்லாந்து அரசாங்கம் கருதுகிறது.

தற்போது லாவோஸில் 40,000 வியட்நாமிய துருப்புகள் நிலைகொண்டிருக்கின்றன என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ண-ந)

---

# இயற்கையின் அனர்த்தத்தில் 25 பேர் மரணம்

டாக்கா, ஜூன் 24

கடந்த வாரம் வங்காளதேசத்தில் பெய்த கடும் மழையின் அனர்த்தங்களினுல் சுமார் 25 பேர் மாண்டார்கள், இவர்களில் ஐவர் சிறுவர்கள் ஆவர்.

வெள்ளப் பெருக்கு, நதிகளின் சீற்றம் ஆகியனவே இந்த மரணங்களுக்குக் காரணமாகும் என்று வங்க மொழித் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ண)

---

# குஜராத் நகரில் வகுப்புக் கலவரம்

புதுடில்லி, ஜூன் 24


குஜாராத்தின் மேற்குப் புற நகரமான கூருத்தில் நேற்று சனிக்கிழமை வகுப்புக் கலவரம் தலைதூக்கியது.

இடம்பெற்ற மோதல்களினுல் சுமார் 100 பேர் படுகாயமுற்ருர்கள்.


வன்முறைக் கும்பல்களை விரட்டியடிப்பதற்காகப் பொலீஸார் பல தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். சுமார் 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 10 நாட்களுக்கு முன்னர் இரண்டு சமூகத்தவர்களுக்கு இடையே நடைபெற்ற சண்டை ஒன்றை அடுத்தே இந்த மோதல்கள் இடம்பெற்றன. (ண)


# கம்உதாவ காட்சிகள்



"கம்உதாவ 84" கண்காட்சியை அநுராதபுரத்தில் திறந்து வைத்தபின் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் திரு. பிரேமதாசா உரையாற்றுகிறார்.



பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அவரது பாரியார், சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா, திருமதி சேனநாயக்கா ஆகியோர் கொரக்காவெவ சந்தியிலிருந்து மாட்டு வண்டில் ஒன்றில் வைபவம் நடைபெறும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதியை காண்க (எ*த)



ஊர்வலத்தில் பங்குகொண்ட பெண்களில் ஒருபகுதியினர்.

## உலக காங்கிரஸ்

புதுடில்லி, ஜூன் 24

சர்வதேச போக்குவரத்து முகவர் சங்க சம்மேளன உலக காங்கிரஸ் கூட்டம் எதிர்வரும் அக்டோபர் 21ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை புதுடில்லியில் நடைபெறும்.

சுமார் 84 நாடுகளில் இருந்து சுமார் 1400 பிரதிநிதிகள் இந்தக் காங்கிரஸில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ண)

## தோட்ட சேவையாளர் போராட்டம் நியாயமானதே

### மாநிலப் பிரதிநிதி கருத்து

## கதவுகளை உடைத்துக்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுலே வெளியே அனுப்பி வைத்தேன்.

போனரா அல்லது இழுத்துச் செல்லப்பட்டாரா என்பது பற்றியும் தெரியவில்லை.

யம்" 1983 ஆம் ஆண்டு ஜுலை சம்பவத்தின் பின்னரே திறக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில்

## தவறானபாதையில் செல்வோரைக் காக்க

# கதவுகளை உடைத்துக...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னுலே வெளியே அனுப்பி வைத்தேன்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற முன்பதாக பல்கலைக் கழக பூமியில் மாணவர்கள் எங்கும் சுற்றி வளைந்திருக்கக் காணப்பட்டனர். பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெரியவில்லை. காரணம் அது பரபரப்பான சூழலாக இருந்தது. மேலும் அப்பகுதியில் இருள் சூழ்ந்திருந்தது.

### கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

"கண்ணீர்ப் புகையைப் பிரயோகிக்க எனக்கு சுமார் இருபது நிமிடங்கள்வரை சென்றன. பத்து நிமிடங்களுக்குப் பின்னரே இதனை உபயோகித்தேன்.

கண்டி தலைமைப் பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. நெல்லேகொடவின் தலைமையின் கீழ் இந்தச் சம்பவம் நடைபெற்று சுமார் ஒன்றரை மணித்தியாலத்தின் பின்னரே, ஒரு பொலீஸ் கோஷ்டி அங்கு வந்தது. அடிக்கடி றிவோல்வரைக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தேன்.

இன்ஸ்பெக்டா நெல்லேகொட வரும்பொழுது கூட எனது கையில் றிவோல்வர் இருக்கத்தான் செய்தது. மாஜிஸ்திரேட், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த வேளையில் நான் ஏற்கனவே உபயோகித்த இயந்திரத் துப்பாக்கி இயங்க மறுத்தது அதில் ஒரு ரவை இறுகிப்போய் இருந்ததையும் காட்டினேன்.

அதன் பின்னர் எனக்குப் பாதுகாப்பாக இருந்த ஒரே ஒரு ஆயுதம் றிவோல்வர் மாத்திரமே.

"கான்ஸ்டபிள் குணதிலக்காவக்கு நெற்றியில் கல்லெறியினால் காயம் ஏற்பட்டது. சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது தான் [illegible] நடந்தது.

ஆரம்பத்தில் போது பொலீஸ் நிலையத்தின் உள்ளே மாணவர் ஒருவர் இருந்ததை நான் காணவில்லை. ஏனைய பொலீஸார் இவரைக் கண்டுள்ளனர்.

அவர் ஒரு மாணவர்தானா என்பது பற்றி நான் இன்னும் அறிய முடியவில்லை. அங்கு அவர் நுழைந்ததையும் காணவில்லை. அவர் அங்கிருந்து போனரா அல்லது இழுத்துச் செல்லப்பட்டாரா என்பது பற்றியும் தெரியவில்லை. சமையலறைப் பக்கம் இருந்து கொண்டு என்ன செய்தார் என்பதும் எனக்குத் தெரியாது.

### பொலீஸ் நிலையம் அமைத்தது குறித்து எதிர்ப்பு

பல்கலைக் கழகவளவுக்குள் பொலீஸ் நிலையம் அமைக்கப் பட்டிருப்பது குறித்து, அதனை ஒரு பகுதியினர் எதிர்த்து வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் பொலீஸ் நிலையம் ஒன்று அங்கு இருக்கவில்லை. பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவு ஒன்று அங்கு எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது என்பதும் எனக்கும் தெரியாது.

பல்கலைக்கழக பொலீஸ் நிலையம் பொதுமக்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப் பட்டது. பொலீஸ் நிலையம் நிறுவப்பட்ட பின்னர் அங்கு பயங்கர துப்பாக்கிகள் வைக்கக் கூடாதென்ற முடிவுக்கு எவரும் வரவில்லை. [illegible] கள் பற்றி [illegible] அங்கு [illegible]. றிவோல்வரைக் [illegible] அங்கு [illegible] துப்பாக்கி [illegible].

"சாஸ்லிய பொலீஸ் நிலையம்" 1983 ஆம் ஆண்டு ஜுலை சம்பவத்தின் பின்னரே திறக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் சிறுபான்மை இனத்தவரும் இருக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பு இதில் முக்கியமாகக் கருதப்பட்டது"

(எ–105)

## தெல்தெனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிறது. இதனால் இப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

விக்டோரியாத் திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர்மின் சக்தி ஜுலை மாதம் 17 ஆம், 18ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும்.

இந்த மின் விநியோகம் தொடர்பான வைபவம் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்காவின் தலைமையில் நடைபெறும்.

விக்டோரியா நீர்த்தேக்கத்தினல் அடுத்த இரண்டு வாரத்திற்குள் மஹியங்கனை – கண்டி போக்குவரத்துப் பாதைகளும் முற்றாக நீரினல் மூழ்கடித்து விடும்.

இதனல் மஹியங்கனையை நோக்கிச் செல்லும் சகல வாகனங்களும் புதிய பாதையினூடாகவே செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(ண–ர)

# அதிகமின்சாரத்தை

## எதிர்காலத்தில் பெற

### நீர்ப்பாசனத் திட்டங்கள் உதவும்

### –அப்புஹாமி

பண்டாரவளை, ஜூன் 25.
நாம் ஆரம்பித்திருக்கும் நீர்ப்பாசனத் திட்டங்களால் எதிர்காலத்தில் அதிகளவு மின்சாரம் கிடைக்கும். அவ்வேளையில் மின்சாரக் கட்டணமும் நியாயமான அளவு குறைந்துவிடும். இந்த அரசாங்கமே கிராமப் புறங்களை ஒளிமய மாக்கி வருகிறது.

இவ்வாறு கூறினர் பதுளை மாவட்ட அமைச்சரும், பண்டாரவளை எம். பியுமான திரு. ஆர். எம். அப்புஹாமி.

கிராம மின்சாரத் திட்டத்தின் கீழ் பண்டாரவளை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த பொரலந்தை — கிதல் எல்ல என்னும் இடத்தில் மின்சார [illegible] ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

மாவட்ட அமைச்சர் திரு. அப்புஹாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

கிராமப் புறங்களுக்கு மின்சார இணைப்புகள் வழங்குவதனல் வீடுகள் ஒளிமயமாகின்றன.

சிறு சிறு கைத்தொழில்களையும் ஆரம்பிக்க வாய்ப்புக் கிட்டுகிறது. முன்னைய அரசாங்கங்கள் நகர்ப் புறங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வந்திருக்கின்றன.

ஆனல், ஜனதிபதி ஜயவர்த்தனவின் அரசாங்கம் கிராம முன்னேற்றத்திலேயே அதிக ஆர்வம் செலுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினர்.

(எ–39)

# தவருணபாதையில

## செல்வோரைக் காக்க சமயம் ஒரு சிறந்த ஆயுதம்

### காமினி திசாநாயக்க கருத்து

குருநாகல், ஜூன் 25
எதிர்கால சந்ததியினருக்கு சமயக் கல்வி கட்டாயம் போதிக்க வேண்டும்.

தவறான வழியில் செல்கின்றவர்களைப் பாதுகாக்க சமயத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்க கூறினர்.

குளியாப்பிட்டிய கனதுள்ள பௌத்த விகாரையில் ஞாயிறு பாடசாலை மாணவருக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது.

அமைச்சர் காமினி திசாநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

தீவிரவாத நடவடிக்கைகளால் நாட்டில் அமைதியில்லாமல் இருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் பரஸ்பர நல்லுறவுகளை ஏற்படுத்த நாம் அனைவரும் முயல வேண்டும்.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

(எ–138)

# நியாயமானதே

## மாநிலப் பிரதிநிதி கருத்து

அப்புத்தளை, ஜூன் 24
தோட்ட சேவையாளர்களினல் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் போராட்டம் நியாயமானதும், கவனிக்கப்பட வேண்டியதுமாகும்.

— இவ்வாறு தோட்ட சேவையாளர் சங்க (சி. ஈ. எஸ். யூ.) நமுனுகுல மாநிலப் பிரதிநிதி திரு எம். பி. ஜெகநாதன் கூறினர்.

நமுனுகுல இந்தகல்ல தோட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

1975ஆம் ஆண்டிற்குப் பின் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

1975ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவிற்கும் தற்போதுள்ள வாழ்க்கைச் செலவிற்கும் உள்ள வித்தியாசம் மலையையும் மடுவையும் போன்றதாகும்.

இன்று தேயிலையின் விலை உலக சந்தையில் என்றுமில்லாதவாறு உயர்ந்திருக்கிறது.

இதனல், தேயிலை ஏற்றுமதி மூலம் அரசாங்கத்திற்கு கோடிக் கணக்கான ரூபா பணம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கின்றது.

கடந்த வருடங்களை விட, தற்போது பெரும்பாலான தோட்டங்கள் லாபத்திலேயே இயங்குகின்றன.

தோட்ட சேவையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட வழியில்லை.

சேவையாளர்களின் வாழ்க்கை நலனில் அக்கறை கொண்டு அரசாங்கம் உடனடியாக சம்பள உயர்வு, வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் சொன்னர்.

(எ–100)

# இந்திய வம்சாவளியினருக்கு 9 எம். பிக்கள் இருக்க வேண்டும்

## அப்படி இல்லாததால் பெரும் பாதிப்பு

### இ. தொ. கா. நிர்வாகசபைக் கூட்டத்தில் தொண்டமான்

கொழும்பு, ஜூன் 25
இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப 9 எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். ஆனல் இன்று இருப்பதோ ஒரேயொரு எம். பிதான்.

9 எம்பிக்களுக்குரிய சலுகைகள் இழக்கப் படுவதால், மலையக இந்திய வம்சாவளி மக்கள் சமூக, பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இ. தொ. கா. வின் நிர்வாக சபைக் கூட்டம், அதன் தலைமைப் பணியகத்தில் நடைபெற்றது.

தலைவர் திரு. தொண்டமான் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, பதில் நிர்வாக செயலாளர் திரு. இரா. தங்கவேல், துணைப்பொதுச் செயலாளர்கள் திரு. எஸ். ராஜு, திரு. டி. வி. சென்னன், மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தலைவர் திரு. தொண்டமான் இக் கூட்டத்தில் பேசும் போது கூறியதாவது:—

இந்திய வம்சாவளி மக்கள் இன்று 8 லட்சத்து 29 ஆயிரம் பேர் இருக்கின்றனர். 90 ஆயிரம் பேருக்கு ஒரு எம். பி. என்ற அடிப்படையில், மலையக மக்களுக்கு 9 எம். பிக்கள் இருக்க வேண்டும்.

ஆனல், நான் ஒருவனே எம். பியாக இருக்கிறேன். எனக்கு பன்முக வரவு செலவுத் திட்டத்தில் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்படுகிறது.

இந்த தொகையை நான் எனது நுவரெலியா/மஸ்கெலியா தொகுதிக்கு செலவழிக்க முடியும்.

நுவரெலியா/மஸ்கெலியா தொகுதியில், மலையக மக்களின் சமூக, கல்வி அபிவிருத்தித் திட்டங்களுக்கு இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை ஏனைய தொகுதிகளில் வாழும் மலையக இந்திய வம்சாவளி மக்கள் அரசினல் கிடைக்க வேண்டிய சலுகைகளை பெற முடியாமல் இருக்கிறார்கள்.

இந்தப் பாதிப்பினை அரசுக்கு நாம் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அரசு எமது நியாயமான கோரிக்கையை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, அடுத்த வருடம் முதல் நிதி ஒதுக்கித் தர முன்வந்துள்ளது.

நமது சமூகத்தின் இளைஞர்கள் தம் சக்தியை வீணே [illegible] சமூகத்தின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயலாற்ற முன் வருவது அவசியமாகும்.

ஒன்றுபட்ட சக்தியின் மூலமே பல சாதனைகளை சாதிக்க முடியும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

நாம் இது காலம்வரை தொழிற்சங்க பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தி வந்தோம். இப்பொழுது நமது சமூகத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் நாம் எமது கவனத்தை திசைதிருப்பி உள்ளோம்.

எனவே, இளைஞர்களின் சக்தியை இத்துறையில் பயன்படுத்துவது முக்கியமாகும்.

இன்று, கிராம அபிவிருத்தி அலுவலகர்களாக, இலங்கை பிரஜா உரிமையற்றவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

இளைஞர்கள், இவ்வாறான சந்தர்ப்பங்களை பயன்படுத்தி நம் மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு உழைக்க முன்வர வேண்டும்.

— இப்படி அமைச்சர் சொன்னர்.

(ப–வ)

## டெலிவிஷன்

25 — 6 — 1984

### ரூபவாஹினி

5.30 நோ யுவர் கண்ட்ரீ
5.35 வுடி வுட் பெகர் அன்ட் பிரெண்ட்ஸ்
6.00 விளையாட்டுப் பயிற்சி — ஜூடோ
6.30 "ரடின் தொடின்"
6.55 செய்திகள் — தமிழ்
7.15 கலை அரங்கம் — தமிழ்
7.45 பறவைகளின் உலகம்
8.15 செய்திகள் — சிங்களம்
8.35 பியூசர் அட்ரக்சன்ஸ்
8.55 "ஹியஸ் மினிஸ்டர்"
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 டு டான்ஸ் போர் கோல்ட்
10.30 உலகச் செய்திகள்
10.35 டு டான்ஸ் போர் கோல்ட்

### ஐ. டி. என்.

6.31 பிளே ஹவுஸ்
7.00 மது ரசாங்க
8.00 டொக்டர் ஒன் த கோ
8-30 பால்கன் கிரெஸ்ட்
9-30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 ரிச் மேன் புவர் மேன்

## மடுமாதா உற்சவம்

பேசாலை, ஜூன் 24

மடு மாதா ஆலய உற்சவம் எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக மடு பரிபாலகர் அருட்திரு. பி. தேவராஜா அடிகள் தெரிவித்தார்.

உற்சவத்தின் போது ஆலயச் சுற்றாடலிலும், மடு வீதியிலும் தற்காலிக பொலீஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் தற்காலிக வைத்தியசாலை, நீதிமன்றம் என்பனவும் அமைக்கப்படும்.

யாத்திரீகர்களின் போக்குவரத்து வசதி கருதி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் விசேட பஸ் சேவைகள் நடத்தப்படும். (ல—251)

## அகதிகள் மாற்றம் குறித்து நலன்புரிக் குழு மகஜர்

கொழும்பு, ஜூன் 25

"மட்டக்களப்பு குடியேற்றத் திட்டத்தில் குடியேற ... கொழும்பு

விளையாட்டுத்துறையில்

# மாணவர்களை ஊக்குவிப்பது பாடசாலைகளின் கடமை

## மேலதிக கல்விப் பணிப்பாளர் கூற்று

ஏழாலை, ஜூன் 24

மனித உள்ளத்தில் உண்மை, கருணை, இரக்கம் முதலிய நற்பண்புகள் வளர்வதற்கும், பரந்த மனப்பான்மை மிளிருவதற்கும் விளையாட்டு மிக இன்றியமையாதது. சகல பாடசாலைகளும் இத் துறையில் மாணவர்களை ஊக்குவிப்பதை தலையாய கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வட மாநில மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் இவ்வாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வட மாநில சித்திரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பித்துரை, மானிப்பாய் முன்னாள் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய மேலதிக கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டதாவது:—

இன்று ஆசிரியர்களினதும், அதிபரினதும் அயரா முயற்சியால் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இவ் வித்தியாலயம் எதிர்காலத்தில் மாடிக் கட்டடங்களும், பரந்த விளையாட்டு மைதானமும் பல்லாயிரக் கணக்கான மாணவர்களும் கொண்ட மாபெரும் கல்வித் தாபனமாக மாறப் போவது உறுதி.

அதற்கான அறிகுறிகளை இவ் விளையாட்டு விழாவின் போது நான் அவதானித்துள்ளேன். ஊர் மக்களும் இவ்வுண்மையை உணர்ந்து வித்தியாலயத்துக்கு தமது முழுமையான ஆதரவைத் தயங்காது வழங்க வேண்டும்.

அதிபர் தமது தலைமை உரையில்,

மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த இப் பாடசாலையைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக நானும், சக ஆசிரியர்களும் முயன்று முன்னேற்றி வருகிறோம். பாடசாலையின் வரலாற்றிலே நடத்தப்படும் மூன்றாவது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இதுவாகும்.

மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ற கட்டட வசதியோ, விளையாட்டு மைதானமோ எம்மிடமில்லை. கல்வியின் முக்கிய அம்சமான விளையாட்டை நாம் மறக்கவில்லை என்பதனை இவ் விழா ஊர்ஜிதப்படுத்துகிறது.

இன்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்குவதற்கான வெற்றிக் கிண்ணங்களையும், கேடயங்களையும் அன்பளிப்புச் செய்தவர்களை நான் பாராட்டுகிறேன்.

போட்டிகளில் சேரன் இல்லம் முதலாம் இடத்தையும், சோழன் இல்லம் இரண்டாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

வெற்றி பெற்ற இல்லங்களுக்கான பரிசில்களை மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் வழங்கினர். (ந)

# ரஷ்யாவில் விளையாட்டு விழா

## ஒலிம்பிக் போட்டிக்கு பின்னர் நடைபெறும்

மாஸ்கோ, ஜூன் 24

எட்டு விளையாட்டுகளை உள்ளடக்கிய விளையாட்டு விழா ஒன்றை ரஷ்யா ஏற்பாடு செய்துள்ளது. லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டியின் பின் இந்த விளையாட்டு விழா நடைபெற உள்ளது.

மாஸ்கோ, டெலினின் ஆகிய நகரங்களில் இந்த விழா ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை நடைபெறும்.

ஒலிம்பிக் போட்டிகள் லொஸ் ஏஞ்சல்சில் ஜூலை 28 ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 12 ஆம் திகதிவரை நடைபெற உள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளுக்குப் போட்டியாகவோ அல்லது ஒலிம்பிக் போட்டிகளை பகிஷ்கரிக்கும் நாடுகள் மட்டும் பங்குபற்றும் நிகழ்ச்சியாகவோ இது இருக்காதென ரஷ்ய விளையாட்டு அதிகாரி ஒருவர் கூறினர்.

கட்டுப்பாடு அற்ற இந்த விளையாட்டு விழாவில் எந்தவொரு நாடும் கலந்து கொள்ளலாமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

மெய்வல்லுநர் போட்டிகள், நீச்சல், கூடைப் பந்தாட்டம், சைக்கிளோட்டம், படகு வலித்தல், ஹாக்கி, சுடுதல், படகோட்டம் ஆகிய விளையாட்டுகளே இவ் விளையாட்டுப் விழாவில் இடம்பெறுகின்றன.

## வெற்றிக் கேடயங்கள் அன்பளிப்பு

பளை, ஜூன் 24

பரந்தன் கல்வி வட்டாரத்திற்குத் தேவையான வெற்றிக் கேடயங்களை அப்பகுதி பிரமுகர்கள் அன்பளிப்பு செய்துள்ளார்கள்.

பளை மகா வித்தியாலயத்தில் அண்மையில் பிரமுகர்களாலும், தொண்டர்களாலும் அன்பளிப்பு செய்யப்பட்ட கேடயங்களை பளை மகா வித்தியாலய அதிபர் திரு. அ. பொ. செல்லையா, பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியிடம் கையளித்தார். (ந—239)

## ராஜா விளையாட்டு கழகம் சாம்பியன்

வவுணதீவு, ஜூன் 24

பட்டிருப்புத் தொகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே ஒழுங்கு செய்யப்பட்ட அமரர் பி. ரி. அரசன் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கட் சுற்றுப் போட்டியில் குருக்கள் மடம் ராஜா விளையாட்டுக் கழகம் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

குருக்கள் மடம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் மோதிய பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டு அணியை 1 இன்னிங்ஸ் 44 ஓட்டங்களால் ராஜா விளையாட்டுக் கழகம் தோற்கடித்தது. (ந—318)

## இன்றைய திரைகளில்

5-வதுவாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சரஸ்வதி
(திருமலை)
6-00 9-30.

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

# விளையாட்டுப் பகுதி

# கம்பஹாவில் விளையாட்டு விழா

வியாங்கொடை, ஜூன் 24

கம்பஹா மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் தொம்பை தேர்தல் தொகுதியில் இருக்கும் இளைஞர் இயக்கங்களுக்கிடையில் கலாசார நிகழ்ச்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் கொண்ட மாபெரும் விளையாட்டு விழாவொன்று நடத்தப்படவுள்ளது.


இந்த விளையாட்டு விழா திரு. பீ. எச். பெரேரா ஆகியோரின் தலைமையில் பாளுகமை சியனு மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறும்.

மைதான சுவட்டு விளையாட்டுக்களுடன், எல்லே, கரபந்தாட்டம், வலைபந்தாட்டம் ஆகியவையுடன் சிறு நாடகம், பாட்டு, பேச்சு போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

பிரஸ்தாப விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக தொம்பை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 32 இளைஞர் சமா

## வர்த்தக சேவை உதைபந்தாட்டம்

## உலக டெகதலன் சாம்பியன்



கொழும்பு, ஜூன் 25

"மட்டக்களப்பு குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்படவிருக்கும் கொழும்பு அகதி முகாம்களைச் சேர்ந்தவர்களை அங்குமிங்கும் இடத்துக்கிடம் மாற்றிக் கொண்டிராமல் வெகு விரைவில் மட்டக்களப்பிலேயே குடியேற்றவும்."

கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில் அகதி முகாமைச் சேர்ந்த அகதிகள் நலன்புரிக் குழு, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் மேற்படி வேண்டுகோளை மகஜர் மூலம் கையளித்துக் கோரிக்கை விடுத்துள்ளது.

பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில் அகதிகள் முகாமில், அகதிகள் நலன்புரிக் குழுத் தலைவர் சி. செல்வராஜா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டமொன்று நடைபெற்றது.

அக் கூட்டத்தில் அகதிகளின் நிலை குறித்தும் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பில் அகதிகளைக் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவரும் அமைச்சர் திரு. செ. இராசதுரையைப் பாராட்டுவதென்றும் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டது. (த)

## உதைபந்தாட்டம்

கொழும்பு, ஜூன் 25

சாமுவேல் சன்ஸ் அணிக்கும், யுனைடட் எலக்ட்ரிகல்ஸ் அணிக்கும் இடையே சிட்டி லீக் மைதானத்தில் நடைபெற்ற வர்த்தக சேவைகளின் "பி" டிவிசன் உதைபந்தாட்டப் போட்டியில் சாமுவேல் சன்ஸ் அணி 10 — 0 கோல்களால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 4—0 புள்ளிகளால் சாமுவேல் சன்ஸ் அணி முன்னணியில் நின்றது.

இப் போட்டியில் ஆர். இபுனு சாமுவேல் சன்ஸ் அணிக்காக 8 கோல்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மற்றைய இரு கோல்களையும் எஸ். சோமதாச, எஸ். குணவர்த்தன ஆகியோர் பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டிக்கு டி. முகராமத்தியஸ்தம் வகித்தார். (ந)

கொழும்பு, ஜூன் 25

லேக் ஹவுஸ் அணிக்கும், எயார் லங்கா அணிக்கும் இடையே சிட்டி லீக் மைதானத்தில் நடைபெற்ற வர்த்தக சேவைகள் "ஏ" டிவிஷன் உதைபந்தாட்டப் போட்டியில் லேக் ஹவுஸ் அணி 10—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 4—0 கோல்களால் லேக் ஹவுஸ் அணி முன்னணியில் நின்றது.

யு. எல். நிஹால் (3), டி. எம். டி. பண்டார (2), கே. ஏ. சுபசிங்க (3), யு. எல். சுனில் (2) ஆகியோர் லேக் ஹவுஸ் அணிக்கான கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

எயார் லங்கா அணிக்கு பி. ஜி. டிக்சன் கோல் போட்டார்.

லெப்டினன்ட் சி. எஸ். பெர்னாண்டோ இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (ந)

## குருநாகலையில் 1000 கிணறுகள்

கொழும்பு, ஜூன் 25

குருநாகல் மாவட்டத்தில் ஜெர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் ஆயிரம் கிணறுகள் நிர்மாணிக்கப்படும்.

இதற்கான ஜெர்மன் அரசின் உதவித் திட்டத்தின் கீழ் 700 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

மேற்படி ஆயிரம் கிணறுகளில் 500 குழாய்க் கிணறுகளும், 300 சாதாரண கிணறுகளும், 200 குளிக்கும் கிணறுகளுமே நிர்மாணிக்கப்பட இருக்கின்றன. (எ—ர)

## "சில்வர் ஸ்டார்ஸ்" உதைபந்தாட்ட சாம்பியன்

சித்தன்கேணி, ஜூன் 24

வவுனியா சன்டோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் வலி மேற்குப் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அராலி சில்வர் ஸ்டாஸ் விளையாட்டுக் கழக "பி" பிரிவு அமோக வெற்றி பெற்றது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் அராலி சில்வர் ஸ்டாஸ் விளையாட்டுக் கழக "ஏ" பிரிவும், "பி" பிரிவும் மோதிக் கொண்டன. 3—1 கோல்களால் "பி" பிரிவு "ஏ" பிரிவைத் தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

இச் சுற்றுப் போட்டியில் வலி. மேற்குப் பிரிவில் உள்ள 13 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

அராலி சில்வர் ஸ்டாஸ் விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டிக்கு திரு. எஸ். கணேஸ் மத்தியஸ்தராகக் கடமை புரிந்தார்.

இப் போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் வவுனியா சன்டோஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். தளதகுமார் மேற்கொண்டிருந்தார். (ந– 283)

## கஞ்சா கடத்திய உல்லாசப் பயணி

தலைமன்னார், ஜூன் 24

சுங்கப் பகுதியினருக்கு டிமிக்கி கொடுத்து, கஞ்சாவை கடத்தி வந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி ஒருவர் தலைமன்னார் பொலீஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

ராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் மார்க்கமாக தலைமன்னார்துறை வந்த இவர் கஞ்சாவை போத்தல் ஒன்றுக்குள் போட்டுக் கொண்டு வந்தார். [illegible]

தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் இவரை பரிசோதனை செய்த போது, அவரின் பொதியில் போத்தல் ஒன்றுக்குள் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்நபரை பொலீஸார் விசாரணையின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் போதைவஸ்தும் பறிமுதல் செய்யப்பட்டது. (ல—286)




தற்போது உலக மெய்வல்லுநர் விளையாட்டு அரங்கில் "டெகதலன்" (ஓடுதல், பாய்தல், எறிதல் போன்ற 10 போட்டி நிகழ்ச்சிகளைத் தொகுத்த ஓர் போட்டி) போட்டியில் வீரர்களிடையே பலத்த போட்டி நிலவி வருகிறது.

"டெகதலன்" போட்டியில் தற்போதைய உலக சாதனையாக 8.777 புள்ளிகளைப் பெற்றுள்ள மே. ஜெர்மன் மெய்வல்லுன வீரர் ஜர்கன் ஹிங்சென்னைப் படத்தில் காண்க. (ந"ச)

## 10 ஆவது ஆசிய பெண்கள் கூடைபந்தாட்டம்

### இலங்கை அணியின் வீராங்கனைகள் தெரிவு

கொழும்பு, ஜூன் 25

சீனவில் நடைபெறும் 10 ஆவது ஆசிய பெண்கள் கூடை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள 20 வீராங்கனைகளைக் கொண்ட குழு ஒன்றை இலங்கை கூடை பந்தாட்ட சம்மேளனம் தெரிவு செய்துள்ளது.

இந்தக் கூடை பந்தாட்டச் சுற்றுப் போட்டி அக்டோபர் 13 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை சீனவில் உள்ள சங்காய் நகரில் நடைபெறும்.

சீனவுக்குச் செல்லும் அணியில் 16 வீராங்கனைகளும், 3 அதிகாரிகளும், ஒரு மத்தியஸ்தரும் செல்வர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள குழுவினர் தற்போது விளையாட்டு அமைச்சு அரங்கில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

முன்னாள் கொழும்பு மாவட்ட மேற்கு மாகாண கூடை பந்தாட்ட வீரர் ரல்ஸ்டன் செனவிரத்ன இக் குழுவிற்கான பயிற்சிகளை அளித்து வருகிறார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள குழுவில் எட்டு பாடசாலை மாணவிகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ந)

கொண்ட மாபெரும் விளையாட்டு விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த விளையாட்டு விழா தொம்பை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், உணவு கூட்டுறவுத் துறைப் பிரதி அமைச்சருமான திரு. சரத் சந்திர ராஜகருண, கம்பஹா அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. சுரனிமல ராஜபக்ச, வேக்கே உதவி அரச அதிபர் பிரஸ்தாப விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக தொம்பை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 32 இளைஞர் சமாஜங்களிலுள்ள இளைஞர்களிடமும் யுவதிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விழாவை சிறப்பாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந–320)

## மட்டுநகரில் நவீன விளையாட்டரங்கு

வவுணதிவு, ஜூன் 24

மட்டக்களப்பு மாநகர சபைக்கு அருகிலுள்ள அரசாங்க காணியில் நவீன விளையாட்டரங்கு ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இரார்சதுரை மேற்கொண்டு வருகின்றார்.

மட்டுநகர் வாவியை ஆழமாக்கும் திட்டத்தின் கீழ் வாவியிலிருந்து அள்ளப்பட்ட மண்ணில் உள்ள விளையாட்டுக் காணி தற்போது நிரப்பப்பட்டுள்ளது.

இக்காணியில் நவீன உள் விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம் என்பன அமைக்கப்படும்.

இதற்கான நிதியை அமைச்சின் மூலமும், அமைச்சு நடத்தும் கண்காட்சி, வெளிநாட்டு உதவி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஆகியவற்றின் மூலம் பெறுவதற்குரிய நடவடிக்கைகளையும் அமைச்சர் மேற்கொண்டு வருகின்றார். (ந–318)

## தேசிய அணியின் வீரர்களுக்கு தொழில் வாய்ப்பு

### பிரதம மந்திரி நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 25

இலங்கையின் தேசிய உதைபந்தாட்டப் பயிற்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள தொழில் வாய்ப்பு இல்லாத உதைபந்தாட்ட வீரர்களுக்குத் தொழில் பெற்றுத் தர பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாச நடவடிக்கை எடுத்துள்ளார்.

தேசிய பயிற்சிக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட 20 வீரர்களில் ஏழு பேர் தொழில் இல்லாத நிலையில் இருந்தனர்.

இவர்களது நிலைமை பற்றி உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜனாப் எப். ஏ. யாசீன் பிரதம மந்திரியிடம் எடுத்துரைத்தார்.

இதனைக் கேள்வியுற்ற பிரதம மந்திரி, பல தொழில் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு இவர்களுக்குத் தொழில் பெற்றுத் தர உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

தொழில் பிரமுகர்கள் இந்த வேண்டுகோளுக்கு சம்மதித்தனர். இவ்விதம் சம்மதம் தெரிவித்தவர்களுள் கொழும்பு நகர மேயர் திரு. சிறிசேன குரேயும் ஒருவராவார். சில வீரர்களுக்கு இவர் கொழும்பு நகர சபையில் வேலை வாய்ப்பு அளித்துள்ளார்.

அக்டோபர் மாதம் ஜெத்தாவில் நடைபெறும் ஆசிய உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் அணியின் வீரர்கள், புத்துணர்ச்சியுடன் விளையாடி சிறந்த பெறுபேறுகளைப் பெற இந்த தொழில் வாய்ப்புகள் உதவுமென பிரதம மந்திரி கூறினார். (ந)

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்


# ஆறு மாதத்தில் 573 கொலைகள்

## பொலீஸ் தலைமையகம் தரும் புள்ளிவிவரங்கள்

கொழும்பு, ஜூன் 25

வருட ஆரம்பத்திலிருந்து நேற்று வரை 6 மாத காலத்தில் நாட்டில் 573 கொலைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

பொலீஸ் தலைமையக குற்றத் தடுப்பு பிரிவின் அறிக்கை ஒன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆறு மாதத்தில் நடந்த குற்றச் செயல்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி வருட ஆரம்பத்தில் இருந்து நேற்று வரை நடந்த மற்றும் குற்றச் செயல்களின் விவரங்கள் வருமாறு:—

* 8 வங்கிக் கொள்ளைகள்,
* 118 நெடுஞ்சாலை கொள்ளைகள்,
* 85 துப்பாக்கிகள் கொள்ளை,
* 190 வாகனங்கள் கொள்ளை,
* 50 ஏனைய கொள்ளைகள். (ப-மு)

## ஜே. ஆர். - இந்திரா நல்லுறவுப் பேச்சு

### அது வட்டமேசை மாநாடு அல்ல—லலித்

கொழும்பு, ஜூன் 25

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நல்லுறவுப் பேச்சுவார்த்தை நடத்தவே ஜனாதிபதி அங்கு செல்கிறார். வேறு எவருடனும் வட்டமேசை மாநாடு நடத்துவதற்கு அல்ல.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோரும் புதுடில்லி செல்வதாக ஒரு பத்திரிகைச் செய்தி வெளிவந்துள்ளது.

இந்தியா பெரிய தேசம். அங்கு யாரும் செல்லலாம். ஆனால் நாம் அவர்களுடன் அங்கு வட்டமேசை மாநாடு நடத்தப் போவதில்லை.

இந்திய அரசுடன்தான் நாம் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம்.

சர்வகட்சி மாநாடு குறிப்பிட்டபடி ஜூலை 5 ஆம் திகதி நடைபெற மாட்டாது. பின்னர் ஒரு திகதியில் நடைபெறும்.

ஜனாதிபதி இந்தியா சென்று திரும்ப இருப்பதாலும், அன்றே நாடாளுமன்றம் கூட இருப்பதாலும், சில அசௌகரியங்கள் ஏற்படலாம். அதனால் தான் சர்வகட்சி மாநாடு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இவ்வாறு திரு. அத்துலத் முதலி தெரிவித்தார். (சு)

## டாக்டர்கள் அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 25

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் கொழும்பு பெரியாஸ்பத்திரி, கொழும்பு தெற்கு (களுபோவிலை) ஆஸ்பத்திரி டாக்டர்கள் இரண்டு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். (ப)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 22 இல்

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. 2516.25 | ரூ. 2517.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 22 இல்

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. 2515.65 | ரூ. 2518.35 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. 3428.99 | ரூ. 3459.84 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. 902.74 | ரூ. 907.11 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. 292.22 | ரூ. 296.60 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. 10.6740 | ரூ. 10.7566 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்திமூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. 99.68 | ரூ. 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. 307.69 | ரூ. 308.91 |
| 100 ஈரான் ரியால் | ரூ. 28.36 | ரூ. 28.48 |
| 100 இந்திய ரூபா | ரூ. 227.19 | ரூ. 228.15 |
| 100 நேபாள ரூபா | ரூ. 156.03 | ரூ. 156.65 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. 181.91 | ரூ. 182.67 |

## பிரஜாவுரிமை கிடைக்காதவர்களுக்கும் ஆசிரியர் நியமனம்

### ஜனாதிபதியுடன் ரணில் பேசுவார்

கொழும்பு, ஜூன் 25

இலங்கைப் பிரஜா உரிமையற்றவர்களுக்கும், தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான திரு. எம். எஸ். செல்லச்சாமியிடம் கல்வி அமைச்சர் இது தொடர்பாக உறுதியளித்துள்ளார்.

தோட்டப் பாடசாலைகளுக்கு ஆயிரம் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் சம்பந்தமாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தூதுக்குழு கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்திய வம்சாவளியினர் ...

இந்த நிலையில் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் பிரஜா உரிமைப் பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

புதிய அரசமைப்பு சட்டத்தில் இலங்கையில் வசிக்கும் நாடற்ற பிரஜைகள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளுக்கு அளிக்கப்படும் சகலவிதமான சலுகைகளையும் அனுபவிக்கலாம். இந்த சலுகைகள் பத்து வருட காலத்துக்கு நடைமுறையில் இருக்குமென ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பிரஜா உரிமைப் பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி வற்புறுத்தக் கூடாதென எடுத்துக் கூறப்பட்டது.

கொள்கை அளவில் இதனை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சர் ஜனாதிபதி நாடு திரும்பியதும் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி இவ்வாறானவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதி ...

## சந்தேகநபர் நீதிமன்றத்துக்கு வெளியே குத்திக் கொலை

விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர் நீதிமன்றத்துக்கு முன் சுமார் 25 பேரைக் கொண்ட கோஷ்டி ஒன்றால் துரத்திச் செல்லப்பட்டு கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் கொழும்பு ஹல்ஸ்டோப் நீதிமன்றத்துக்கு முன் நடந்தது.

கொழும்பு வில்சன் வீதியைச் சேர்ந்த மொகமட் ஹுசன் மொகமட் அஷ்ரப் (வயது 33) என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

சம்பவம் பற்றி இறந்தவரின் மைத்துனரான மொகமட் இப்ராஹிம் (வயது 42) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

காலஞ் சென்றவர் எனது மைத்துனர். கடந்த வருடம் இடம்பெற்ற ஒரு கொலை தொடர்பாக இவர் சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டனர்.

எனது மைத்துனருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவரை பிணையில் விடும்படி நாங்கள் நீதிமன்றத்தில் கேட்டிருந்தோம்.

இதையடுத்து ஐயாயிரம் ரூபாவை பிணையாக செலுத்தி அவரை விடுவித்தோம்.

அதன் பிறகு வாடகைக் கார் ஒன்றை கொண்டு வருவதற்காக நான் வீதிக்கு சென்று விட்டேன்.

எனது மைத்துனர் கையொப்பமிட்டு நீதிமன்றத்திலிருந்து வெளியே வரும் போது 25 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ...

## இறக்குமதிக் கருவாடு

### கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை

கொழும்பு, ஜூன் 25

துபாயிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் நல்லரக நெத்தலி மற்றும் பொம்பிலிக் கருவாடு வகைகள் இறக்குமதியாகியுள்ளன.

இவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

கருவாடு வகைகள் போதியளவு இருப்பதால் தேவையானவற்றை வெலிசறை களஞ்சிய சாலைகளில் இருந்து பெற்றுக் கொள்ளும்படி கூட்டுறவுச் சங்கங்களை வர்த்தக, கப்பற்றுறை அமைச்சு கேட்டுள்ளது. (ப-11)

## இந்திரா காந்தி திடீர் விஜயம்

புதுடில்லி, ஜூன் 24

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று பஞ்சாப் மாநிலத்துக்கு விஜயம் செய்தார். அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனித பொற் ...

வயது கூடிய காரணத்துக்காக நிராகரிக்கப்பட்ட

## தொண்டர் ஆசிரியருக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜூன் 25

நேர்முகப் ... பரீட்சைக்கு ... காரணப்பட்டது.

துக்கு விஜயம் செய்தார். அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் புனித பொற் கோயிலுக்குச் சென்று பார்வையிட்டார்.

பொற் கோயிலில் இராணுவத்தினர், சீக்கிய தீவிரவாதிகள் மீது நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் முதற் தடவையாக பிரதமர் இந்திரா காந்தி பஞ்சாப் மாநிலத்துக்கு வந்திருந்தார்.

இராணுவத்தினரின் தாக்குதலின் போது பொற் கோயிலில் சேதமுற்ற பகுதிகளில் புனர் நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன. பிரதமர் இந்திரா காந்தி அவற்றைப் பார்வையிட்டார்.

## ஐநூறு யுவதிகள் மத்தியகிழக்குக்கு

கொழும்பு, ஜூன் 25

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வாரியப்பொலை தொகுதியிலிருந்து சுமார் ஐநூறு யுவதிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக, மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கின்றனர்.

வாரியப்பொலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி அமரா பியசிலி ரத்நாயக்க இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மேற்படி தொகுதியைச் சேர்ந்த சகல கிராமங்களிலிருந்தும் இந்த ஐநூறு யுவதிகளும் தற்சமயம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். (எ-11)

## முத்திரை வெளியீடு

கொழும்பு, ஜூன் 25

கம் உதாவ திட்டத்தின் ஆறுவது ஆண்டு விழாவினை முன்னிட்டு இலங்கை முத்திரைப் பணியகம் இன்று 60 சத விசேஷ முத்திரை ஒன்றை வெளியிடுகின்றது.

இம்முறை கம் உதாவ கொண்டாட்டங்கள் நடைபெறும் அனுராதபுரம், பண்டுலகம கண்காட்சித் திடலில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கும் புதிய உப தபால் அலுவலகத்தில் இந்த புதிய முத்திரை வெளியீட்டு வைபவம் நடைபெறும்.

தபால், தந்தி, தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. டீ. பீ. விஜேதுங்க மேரபடி புதிய முத்திரைகளை வெளியிட்டு வைப்பார். (ப- 11)

# மீண்டும் நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜூன் 25

ஆயிரம் ஆசிரியர்களின் நியமனத்துக்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது 28 வயதுக்கு மேற்பட்டவர்கள் என நிராகரிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும், மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்க இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தூதுக் குழுவினரிடம் இவ்வாறு உறுதி அளித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பல தொண்டர் ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சையின் போது 28 வயதுக்கும் மேற்பட்டவர்கள் என்ற காரணத்துக்காக நிராகக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்கள் கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தலைமையில் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தற்பொழுது தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்கள் வயதில் கூடியவர்கள் என்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்த அப்பொழுது இணக்கம் காணப்பட்டது.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டு கடிதம் கிடைக்காமல் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனவர்களுக்கும், மீண்டும் நேர்முகப் பரீட்சைகளை நடத்த கல்வி அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். (த-ய)

## கப்பலில் இடமில்லை தலைமன்னாரில் பயணிகள் அவதி

கொழும்பில் இருந்து இந்தியா செல்ல வந்த சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட பிரயாணிகள், கப்பலில் இடமின்றி தலைமன்னாரில் நின்று தவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி இந்தியா செல்வதற்கான பிரயாண சீட்டுகளை, கொழும்பில் ரயில்வேத் திணைக்களம் இவர்களுக்கு விநியோகித்திருந்தது.

கப்பலில் இடம் இருக்கும் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே ரயில்வே நிலையங்கள் பிரயாணச் சீட்டுகளை விநியோகிக்க வேண்டுமென போக்குவரத்து அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

அமைச்சரின் இந்த உத்தரவை கொழும்பு மத்திய புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உதாசீனம் செய்வதாலேயே இப்படிப் பிரயாணிகள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளியன்று தலைமன்னாரில் இருந்து இந்தியாவுக்குச் சென்ற கப்பலில் ஆயிரம் பிரயாணிகள் மட்டுமே ஏற்றிச் செல்லப்பட்டனர். சுமார் 50க்கும் மேற்பட்டவர்கள் கப்பலில் இடமின்றி தலைமன்னாரில் தங்கியுள்ளனர்.

## யாழ். பல்கலை மாணவருடன் பேச்சு நடத்த லலித் இணக்கம்

கொழும்பு, ஜூன் 25

யாழ். பல்கலைக்கழக மாணவர் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சம்மதம் தெரிவித்துள்ளார்.

வெள்ளியன்று மாலை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் திரு. அத்துலத் முதலியே இதனைத் தெரிவித்துள்ளார்.

தென்பகுதி பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. ஆனால் யாழ். பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக் கல்லூரி ஆகியன மாத்திரம் மூடப்படாத காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

சில குறைபாடுகளை முன் வைத்து இவ்விரு நிறுவனங்களின் மாணவர்கள் பகிஷ்கரிப்பில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் குழப்பம் செய்யவில்லை. ஆனபடியால் அவற்றை மூடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என்னைச் சந்தித்துப் பேச விரும்புகின்றனர். அதற்கு நான் சம்மதம் தெரிவித்துள்ளேன்.

குறைபாடுகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவ நான் என்றும் ஆயத்தமாக உள்ளேன் என்று அமைச்சர் பதில் அளித்தார். (க)

## சேமிப்பு

ரொட்டர்டாம், ஜூன் 22

எண்ணெய் வர்த்தகத்தில் முக்கிய கேந்திரமாக விளங்கும் ரொட்டர்டாமின் சேமிப்பு நிலையங்களில் நிறைய எண்ணெய் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக எண்ணெய்த் தொழிலில் ஈடுபட்டுள்ள வட்டாரங்கள் கூறின.

வளைகுடாயுத்தம் காரணமாக சவூதி அரேபியாவும் நிறைய எண்ணெய்யைச் சேமித்து வைத்திருப்பதாக வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (ந)

## வண. சிங்கராயர் மட்டு. இராணுவ முகாமில்

கொழும்பு, ஜூன் 25

வண. பிதா. சிங்கராயர் மட்டக்களப்பு இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார். அவர் கொழும்பு இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்படவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவருடைய சம்மதத்துடனேயே அவர் மட்டக்களப்பு இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இத்தகவலை வெளியிட்டார்.

தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் வசதிகளுக்காக எனக்கு நன்றி தெரிவித்து வண. பிதா சிங்கராயர் கடிதம் எழுதியிருக்கிறார் என்றும் அமைச்சர் திரு. லலித் கூறினார். (க)

தூதுக்குழு கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்திய வம்சாவளியினர் பெரும்பாலும் இலங்கைப் பிரஜா உரிமைக்கு மனுச் செய்துள்ளனர். பலருடைய மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு பல வருடங்கள் ஆகியும் பிரஜா உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

...தும் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி இவ்வாறானவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் திரு. செல்லச்சாமியுடன், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. சிவஞானம், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும், அரசியல் காரியதரிசியுமான திரு. ஏ.எம்.டி. இராஜன், இ.தொ.கா. இணைப் பதிகாரி திரு. எஸ். மைக்கல் ஜோசப் ஆகியோரும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் சமுகம் அளித்திருந்தனர். (ப- ய)

## மலேசியா நன்கொடை

கொழும்பு, ஜூன் 25

ஜூலை வன்செயல் மறுசீரமைப்பு வேலைகளுக்காக மலேசிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு 10 கோடியே 80 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கி இருக்கிறது.

இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் திரு. அந்தனி இயோ, அதனை நேற்றுக் காலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ரியல் அட்மிரல் திரு. அல்பிரட் பெரேராவிடம் வைபவரீதியாகக் கையளித்தார்.

ஜூலை வன்செயல் மறுசீரமைப்பு வேலைகளுக்காக மலேசிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இரண்டாவது நன்கொடை இது என்பது குறிப்பிடத்தக்கது. (த-8)

## தமிழ்த்தலைவர்கள் டில்லி செல்ல மாட்டார்கள்

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் எவரும் புதுடில்லியில் இருக்க மாட்டார்கள் என்று இந்தியத் தூதுவர் சத்வால் சனிக்கிழமை கொழும்பில் தெரிவித்தார். (ப)

எனது மைத்துனர் கையொப்பமிட்டு நீதிமன்றத்திலிருந்து வெளியே வரும் போது 25 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று அவரை துரத்திச் சென்று கத்தியால் குத்தியது என்பதை பின்னர் அறிந்தேன்.

அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போன போது அவர் அங்கு இறந்து விட்டார்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. சி. ஏ. எஸ். இ-கிறிஸ்பீன் கொலை என தீர்ப்பு வழங்கினார்.

சந்தேக நபர்களை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜராக்கும்படி உத்தரவிட்டார். (ஆ-ஜ)




IMPERIAL TRAVEL

OFFERS
UNBEATABLE AIR FARES TO
SOME DESTINATIONS
AT NET PRICE

| | |
|---|---|
| கொழும்பு/மட்ருஸ் | 1300/- |
| கொழும்பு/மாலைதீவு | 1450/- |
| கொழும்பு/பம்பாய் | 2800/- |
| கொழும்பு/கராச்சி | 3200/- |
| கொழும்பு/சிங்கப்பூர்/கொழும்பு | 6900/- |
| கொழும்பு/கோலாலம்பூர்/கொழும்பு | 6900/- |
| கொழும்பு/பேர்லின் | 10500/- |
| கொழும்பு/இலண்டன் | 9400/- |
| கொழும்பு/டப்ளின் (அயர்லண்ட்) | 12610/- |
| கொழும்பு/இலண்டன்/கொழும்பு | 17560/- |
| கொழும்பு/டென்மார்க்/கொழும்பு | 20800/- |
| கொழும்பு/செக்கோசிலாவாக்கியா/கொழும்பு | 20800/- |
| கொழும்பு/ரோம்/கொழும்பு | 20800/- |
| கொழும்பு/நியூயோர்க் | 14500/- |
| கொழும்பு/நியூயோர்க்/கொழும்பு | 26200/- |
| கொழும்பு/மொன்றியல்/கொழும்பு | 26200/- |
| கொழும்பு/அம்ஸ்ரடாம்/மொன்றியல் | 15400/- |
| கொழும்பு/அம்ஸ்ரடாம்/ரொறன்ரோ | 16300/- |
| கொழும்பு/குவைத் | 8740/- |
| கொழும்பு/மஸ்கற் | 6940/- |
| கொழும்பு/டுபாய் | 6940/- |
| கொழும்பு/பஹ்ரேய்ன் | 7840/- |
| கொழும்பு//டஹ்ரான் | 7840/- |
| கொழும்பு/டோஹா | 7840/- |
| கொழும்பு/மெல்பேர்ன் | 12100/- |
| கொழும்பு/சிட்னி | 12100/- |
| கொழும்பு/ஹொங்ஹொங் | 9850/- |

பாஸ்போர்ட், விமான டிக்கட்டுகள், விசா, பிரயாணிகள் காசோலைகள், மற்றும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:—

திரு. பாக்யராஜ்

இம்பீரியல் ரவல்

முதலாம் மாடி
51, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு – 11
தொலைபேசி:– 549957


தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பீ. ஏ. என். எஸ்.-வெ ஊ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.


இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 25 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 12 P. O. Box 1613.